janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 | 2023 மார்ச் 26 - ஏப்ரல் 01 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 51




## எங்கே எனது வேலை?

# இளைஞர் தொடர் பரப்புரை எழுச்சிப் பயணம் துவங்கியது!

வேலையின்மைக்கு எதிராக, ஒன்றிய அரசே! மாநில அரசே! எங்கே எனது வேலை? என்ற முழக்கத்தோடு, 8 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் சார்பில் தமிழ்நாடு தழுவிய இளைஞர் எழுச்சி தொடர் பரப்புரைப் பயணம், மாவீரன் பகத்சிங் நினைவு நாளான 23.03.2023ஆம் தேதி முதல் தியாகச் செம்மல் கே.பாலதண்டாயுதம் நினைவு நாளான 02.04.2023ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

**நிறைவு நாளில் திருச்சியில் இளைஞர் எழுச்சி மாநாடு நடைபெற இருக்கிறது.**

சென்னை, ஓசூர், கன்னியாகுமரி, வேதாரண்யம் ஆகிய நான்கு முனைகளில் இருந்து 23.03.2023 அன்று பரப்புரைப் பயணம் துவங்கியது.

## சென்னை

சென்னையில் இருந்து துவங்கிய பயணத்தை விடுதலைப் போராட்ட வீரர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் தோழர் இரா.நல்லகண்ணு தொடங்கி வைத்தார். துவக்க நிகழ்ச்சிக்கு இளைஞர் பெருமன்ற மாநிலத் தலைவர் த.கு.வெங்கடேஷ் தலைமை தாங்கினார்.

இதில், கட்சியின் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், மாநில செயற்குழு உறுப்பினர் வகிதா நிஜாம், ஏஐடியுசி மாநில பொதுச் செயலாளர் எம்.ராதாகிருஷ்ணன், மாநிலத் தலைவர் எஸ்.காசி விஸ்வநாதன், தென்சென்னை மாவட்டச் செயலாளர் எஸ்.கே.சிவா, மத்திய சென்னை மாவட்டச் செயலாளர் பா.கருணாநிதி உள்ளிட்டோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

மேலும், மாணவர் பெருமன்ற மாநிலத் தலைவர் தினேஷ் சீரங்கராஜ், தேசியக் குழு உறுப்பினர் எம்.பார்த்திபன், மாநிலத் துணைத் தலைவர் மோ.வேங்கடேசன், நிர்வாகக்குழு உறுப்பினர் சேகுவேராதாஸ், நிர்வாகிகள் சுரேஷ், ஜி.மணிகண்டன், கோட்டி சுரேஷ், மாணவர் பெருமன்ற நிர்வாகிகள் ஆ.மணிகண்டன், ஜெ.அஜீத் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## ஓசூர்

ஒசூரிலிருந்து இருந்து துவங்கிய பயணத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில கட்டுப்பாட்டுக் குழுத் தலைவர் கே.சுப்பராயன் எம்.பி., தொடங்கி வைத்தார். துவக்க நிகழ்ச்சிக்கு இளைஞர் பெருமன்ற மாநிலச் செயலாளர் க.பாரதி தலைமை தாங்கினார். கட்சியின் மாவட்டச் செயலாளர் டி.ஆர்.இராமச்சந்திரன் எம்.எல்.ஏ., மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் எம்.இலகுமய்யா உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர்.

இதில், இளைஞர் பெருமன்ற மாநில துணைச் செயலாளர் வே.வசந்தகுமார், தேசியக் குழு உறுப்பினர் இரா.இரமேஷ், மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் மௌ.குணசேகர், தேசியக் குழு உறுப்பினர் கலை. அஸ்வினி, நிர்வாகிகள் எஸ்.ஆதில், எம்.லட்சுமிகாந்தன், டி.ராஜேஸ்வரி, சூர்யா லகுமய்யா, ஆர்.நரேந்திரன், ஆர்.சதீஷ்குமார், வெ.நிருபன், வி.யோகி நாராயணா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

தொடர்ச்சி 16ம் பக்கம்




சென்னை



ஓசூர்




கன்னியாகுமரி




வேதாரண்யம்




# மக்களைத் தேடி...



போர்க்குணமிக்க தோழர்களே!

**நமது கட்சியின் மாநிலக் குழு கூட்டம் கடந்த 18, 19 மார்ச் 2023 ஆகிய இரு தினங்கள் மாநில தலைமையகமான பாலன் இல்லத்தில் நடைபெற்றது. தேசிய செயலாளர் தோழர் டாக்டர் நாராயணா, மூத்த தலைவர் தோழர் இரா.நல்லகண்ணு கலந்து கொண்ட கூட்டத்தில், மாநிலக் குழு உறுப்பினர்கள், பயிற்சி உறுப்பினர்கள், கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர்கள் மற்றும் புதுவை மாநிலத்தைச் சேர்ந்த அழைப்பாளர்கள் என அனைவரும் மிகுந்த உற்சாகத்துடன் கலந்து கொண்டனர்.**

மாநில செயற்குழு உறுப்பினரும், ஜனசக்தி ஆசிரியருமான தோழர் டி.எம்.மூர்த்தி தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

தேசிய செயலாளர் டாக்டர் நாராயணா ஒன்றிய அரசின் மக்கள் விரோத கொள்கைகளையும், அதனால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளை விவரித்தார். அதானி என்ற ஒற்றை நபருக்காக ஒன்றிய அரசு அனைத்து விதமான தவறான கொள்கைகளை மேற்கொண்டு நாட்டின் துறைமுகங்களையும், விமான நிலையங்களையும், எண்ணெய் வளங்களையும், கனிம வளமிக்க சுரங்கங்களையும் வாரி வழங்கியுள்ளதை விரிவாக எடுத்துக் காட்டினார்.

அரசுடமை வங்கியான ஸ்டேட் பாங்க் பணத்தையும், ஆயுள் காப்பீடு கழகத்தின் பணத்தையும், பல ஆயிரம் கோடி மக்கள் பணத்தையும் வாரி வழங்கிய மோசடிகளையும் அம்பலப்படுத்தினார்.

மக்களுக்கு எதிராக செயல்பட்டு, கார்ப்பரேட் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு பாடுபட்டு வரும் பாஜக அரசை வரும் 2024 ஆம் ஆண்டு தேர்தலில் ஆட்சியை விட்டு அகற்றிட அனைத்து முயற்சிகளையும், மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும், நமது கட்சி மேற்கொள்ள வேண்டிய கடமைகள் குறித்தும் விரிவான முறையில் விளக்கம் அளித்தார்.

கூட்டத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் மற்றும் அமைப்பு நிலை கடமைகள் குறித்து விவாதித்து திட்டமிட்டு நிறைவேற்றப்பட்டன.

முடிவுகளை நாம் முழுமையாக நிறைவேற்றிட முழு ஆயத்தமாக வேண்டும்.

## கட்சி வளர்ச்சி நிதி

மக்களுக்காக, மக்களின் ஒற்றுமைக்காக, நலன்களுக்காக, முன்னேற்றத்திற்காக நாம் அன்றாடம் பணியாற்றி வருகின்றோம்.

மக்களுக்கும் நமக்குமான உறவு என்பது சுயநலமற்றது; உணர்வுபூர்வமானது. நாம் அவர்களுக்காக பணியாற்றுகிறோம்; பாடுபடுகின்றோம் என்பதனை எவரும் மறுக்க இயலாது.

நாட்டில் வாழும் ஒவ்வொரு குடிமகனும் நமது கட்சியால் ஏதோ ஒரு வகையில் பயன் பெற்றுள்ளார் என்பதனை நாம் உறுதியாகக் கூற முடியும்.

நாட்டின் விடுதலைப் போர்க்களத்தில் நம்மை மிஞ்சியவர்கள் யார்? நமது மதிப்புமிக்க தலைவர்கள் அனைவரும் பரிபூரண சுதந்திரம் வேண்டும் என்று முழக்கத்தை முன்னிறுத்தி அதனை நிறைவேற்றிட ஒவ்வொரு தோழரும் தங்களை முழுமையாக ஒப்படைத்தனர். தன் உடல், பொருள், ஆவி அனைத்தும் நாட்டிற்கு சொந்தமென நெஞ்சுறுதியோடு போராடினர். நாட்டின் விடுதலைப் போரில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை நிராகரித்து விட்டு வரலாறு எழுதிட முடியுமா?

நாட்டின் விடுதலை மட்டுமின்றி ஜமீன்களுக்கு எதிராக, நிலப்பிரபுத்துவத்திற்கு எதிராக போராடியதும், அதன் விளைவாக உழுபவனுக்கு நிலம் சொந்தமானதையும் எவராலும் நிராகரிக்க முடியுமா?

நாடு முழுவதும் நடைபெற்ற சமூகக் கொடுமைகளுக்கு எதிரான போராட்டத்தில் செங்கொடி மைந்தர்களின் தியாகத்தை அளவிட இயலுமா?

கருத்தாலும், கரத்தாலும் உழைக்கக்கூடிய மக்களுக்கு அவர்களின் பணி நேரம், ஊதியம், வேலை உத்திரவாதம், சங்கம் அமைக்கும் உரிமை என அனைத்திலும் நமது பங்களிப்பை நிராகரித்திட முடியுமா?

பாரத தேவியைக் கேட்டால் பதில் சொல்வாள். என் கைகளில் மாட்டப்பட்டிருந்த அடிமை சங்கிலியை அறுத்து எறிந்து, நான் விடுதலை பெற வேண்டும் என்பதற்காக, தங்களின் கரங்களிலும், ஏன் கால்களிலும் சங்கிலியால் மாட்டப்பட்டு தெருத்தெருவாக நாயைப் போன்று இழுத்துச் செல்லப்படுவதை ஏற்றுக்கொண்ட அஞ்சாத சிங்கங்கள் கம்யூனிஸ்ட்கள் என உரத்துக் கூறுவாள்.

பிறந்தோம், வளர்ந்தோம், வாழ்ந்தோம் என்று இல்லாது எனது பிறப்பிற்கு அர்த்தம் இருக்க வேண்டும் என்று தன் வாழ்நாளை அர்ப்பணித்துக் கொண்டவர்கள்தான் நாங்கள் என்று ஒவ்வொரு கம்யூனிஸ்ட்டும் நெஞ்சை நிமிர்த்தி உரக்கக் கூற முடியும்.

மக்களுக்காக 1925 ஆம் ஆண்டு பிறந்தோம், மக்களுக்காக போராடினோம்.

நமது போராட்டத்தை கண்டு அன்றைய அந்நியர் ஆட்சியரான வெள்ளை ஏகாதிபத்தியம் குலை நடுங்கியது. நாம் பிறந்த போதே, பச்சிளம் குழந்தையாய் இருந்தபோதே தடை செய்தது. நாடு முழுவதும் நரவேட்டையாடியது. கம்யூனிஸ்ட் என்று சொல்லிக்கொண்டு வெளியே நடமாட முடியாமல் செய்தது. கைது செய்து கொடுஞ்சிறையில் அடைத்தது. சித்திரவதை செய்தது.

துப்பாக்கி தோட்டாக்கள் அனைத்தையும் நம் மீது இரக்கமற்ற முறையில் பாய்ச்சியது. தூக்கு மேடைகளில் துடிதுடிக்க சாகடித்தது. விஷம் கொடுத்தும் கொல்லப்பட்டோம். இவைகளைக் கண்டு எல்லாம் அஞ்சவில்லை; அயரவில்லை. இன் முகத்தோடு நாட்டின் விடுதலைக்காக ஏற்றுக்கொண்டோம்.

விடுதலைக்குப் பின்னரும் இதே நிலைதான். அன்று அந்நியன் கொன்றான். பின்பு நம்மவன் கொன்றான். எத்தனை, எத்தனை விலை மதிக்க வொண்ணா மா மாணிக்கங்களை இழந்து தவித்தோம் என்பது வரலாறு!

அத்தகைய வரலாற்றுக்கு சொந்தக்காரர்களான நாம், யாரை நம்பியும் அன்றும் இல்லை, இன்றும் இல்லை, நாளையும் இல்லை.

நாம் நம்பி இருப்பது நமது நாட்டு மக்களை, அவர்கள் தான் தொழிலாளர்கள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், பெண்கள், வணிகர்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், பணியாளர்கள். மொத்தத்தில் கரத்தாலும், கருத்தாலும் உழைக்கக் கூடியவர்கள்.

அவர்களே நமது உறவினர்கள், நண்பர்கள், தோழர்கள்.

அவர்களுக்கும் – நமக்குமான நல்லுறவை அவ்வப்பொழுதல்ல, அன்றாடம் புதுப்பித்துக் கொண்டே இருப்பது நமது தலையாய கடமையாகும்.

அவர்களுக்காக போராடுகிற நாம், அவர்களுக்காக அர்ப்பணித்துக் கொண்டிருக்கின்ற நாம், அவர்களின் கட்சியான, அம்மக்களின் கட்சியான இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வளர்ச்சிக்கு அவர்களது மகத்தான பங்களிப்பை பெற்றிட வேண்டாமா?

நமது கட்சியின் வளர்ச்சி என்பது நாட்டு மக்களின் வளர்ச்சியாகும்.

நாம் பலம் பெற்றால், அவர்கள் பலம் பெறுகின்றார்கள், நாம் பலவீனம் அடைந்தால் அவர்களும் பலவீனம் அடைகின்றார்கள். நாம் நிமிர்ந்தால் அவர்களும் நிமிர்கின்றார்கள். நாம் சாய்ந்தால் அவர்களும் சாய்கின்றார்கள்.

நாம் எந்த அளவிற்கு பலம் பெற்று திகழ்கின்றோமோ, அப்போது எல்லாம் மக்கள் பயன் பெறுகின்றார்கள்.

நாடாளுமன்றத்தில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் நாம் இருந்த காரணத்தால் தான் மகாத்மா காந்தி வேலை உறுதி அளிப்பு (திட்டமல்ல) சட்டத்தை நாடு முழுவதும் உள்ள கோடிக்கணக்கான கிராமப்புற பாட்டாளி மக்கள் பெற்றார்கள்.

நாம் பலமாக இருந்த காரணத்தால்தான் தகவல் உரிமை பெறும் சட்டத்தை நாட்டின் குடிமக்கள் ஒவ்வொருவரும் பெற்றனர்.

நாம் பலமாக இருந்த காரணத்தால் தான் நாட்டில் உள்ள அனைத்து மக்களும் உணவு பாதுகாப்பு சட்டத்தைப் பெற்றனர்.

**நாம் இப்போது நாடாளுமன்றத்தில் பலமாக இல்லை. விளைவுகள் என்ன என்பதனை நாட்டு மக்கள் உணர்ந்து வருகின்றனர். மேலும் அவர்களை உணரச் செய்திட, அவர்களிடத்தில் அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்திட அவர்களை இல்லம்தோறும் சந்திக்க செல்வோம்.**

நாம் இடைவிடாத பணியாற்றிட, நமது அலுவலகங்கள் எந்நேரமும் செயல்பட, நமது கட்சியை மேலும் மேலும் வளர்த்திட, பலப்படுத்திட நிதி முக்கியமல்லவா?

நிதியை வாரி வழங்க மக்கள் காத்திருக்கின்றார்கள். ஆம், அவர்கள் நம் மக்கள். நம்மை பாதுகாக்கும் அரண் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி என்பதனை அவர்கள் அறியாதவர்கள் அல்ல.

நாம் அவர்களை நோக்கி செல்வோம். ஒவ்வொரு கட்சி கிளைத் தோழர்களும் மக்களிடத்தில் செல்வோம், துண்டு பிரசுரத்தை வழங்குவோம், நம் கட்சிக்கு நிதி தாருங்கள் என்று கேட்போம், அவர்கள் தங்களால் இயன்ற நிதியை நமக்கு வழங்குவார்கள் என்பதில் ஐயப்பாடு இல்லை.

அவர்கள் நிதி கொடுப்பதுடன் நிற்க மாட்டார்கள், அதனுடன் சேர்ந்து தாங்கள் வாழும் பகுதியில் உள்ள அடிப்படை பிரச்சனைகள் தீர்க்கப்படவில்லை என்பதனையும், நம்மிடம் எடுத்துக் கூறுவார்கள். இதுதான் நமக்கும் அவர்களுக்கும் உள்ள நல்லுறவு.

இத்தகைய உறவை புதுப்பிக்க, பலப்படுத்திட களம் காண்போம்.

மாநில குழு உறுப்பினர்கள், மாவட்டக் குழு உறுப்பினர்கள், இடைக்கமிட்டி உறுப்பினர்கள், கிளை உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் அங்கம் வகிக்கும் அமைப்பில் தாங்கள் ஏற்றுக்கொண்ட நிதியினை வழங்குவதுடன், நமது கடமை முடிந்து விடுவதில்லை. நமது பங்களிப்பை மனப்பூர்வமாக வழங்குவதுடன் மக்களிடம் சென்று வசூல் செய்வதும், நமது கடமையாகும்.

நாமும் கொடுப்பது, பிறரிடம் வசூலிப்பது என்ற இரட்டை கடமைகளை நிறைவேற்றிட கடமைப்பட்டுள்ளோம்.

மாநிலக் குழு கூட்டத்தில் மாநிலக் குழு உறுப்பினர்கள் மிகுந்த உற்சாகத்துடன், அவரவரும் தங்களின் சக்திக்கேற்ப ஆயிரம், இரண்டாயிரம், ஐயாயிரம், பத்தாயிரம், இருபதாயிரம், ஐம்பதாயிரம் நிதி வழங்கி உள்ளனர்.

அவர்கள் வழங்கிய நிதிப் பட்டியல் ஜனசக்தியில் முழுமையாக வெளியிடப்படும்.

தோழர்களே மக்களை சந்திப்போம். ஐந்து, பத்து, நூறு, ஆயிரம் என நிதியைப் பெறுவோம்.

ஏப்ரல் 30க்குள் நிதி சேர்க்கும் பணிகளை செம்மையாக நிறைவேற்றி சாதனை படைப்போம். மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

தோழமைமிக்க,



(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்







# அரசை விமர்சித்தால் இந்தியாவின் பெருமை சரிந்துவிடுமா?

**நாடாளுமன்ற கூட்டத்தொடர் தொடங்கியதில் இருந்தே, அவை நடவடிக்கைகள் எதுவுமின்றி முடங்கிக் கிடக்கின்றன. அதானி நிறுவனத்தின் முறைகேடுகள் குறித்து விவாதிக்க வேண்டும். நாடாளுமன்ற கூட்டுக்குழு அமைத்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. இதற்காக நாடாளுமன்ற வளாகத்தில் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.**

அமலாக்க துறை அலுவலகத்தில் மனு அளிப்பதற்காக, எதிர்க்கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊர்வலமாகப் புறப்பட்டனர். ஆனால், ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள டெல்லி காவல்துறை 144 தடை ஆணை பிறப்பிக்கப்பட்டு இருப்பதாகக் கூறி, எதிர்க்கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் செல்லவிடாமல் தடுத்து நிறுத்தியது.

நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் எதிர்க்கட்சிகளைப் பேச விடாமல் ஆளும் பாஜகவினர் அமளியில் ஈடுபடுகின்றனர். ராகுல் காந்தி லண்டனில் பேசியதற்கு மன்னிப்புக் கேட்க வேண்டும். ராகுல் காந்தியின் லண்டன் பேச்சால் இந்திய ஜனநாயகத்தின் மாண்புகள் சிதைக்கப்பட்டு விட்டதாக பாஜக நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

ராகுல் காந்தி லண்டனில் பேசும் போது, இந்திய ஜனநாயகம் தாக்குதலுக்கு உள்ளாகி இருப்பதாகப் பேசினார். அவருடைய இந்தப் பேச்சு இந்தியாவின் புகழை அழித்து விட்டதாம்! இந்தியாவின் மதிப்புகளை சிதைத்து விட்டதாம்! நாட்டை அவமதித்த ராகுல் காந்தியை நாடாளுமன்றத்தில் இருந்து சஸ்பெண்ட் செய்ய வேண்டும் என்பது பாஜக உறுப்பினர்களின் வாதம்.

"இந்திய ஜனநாயகம் தாக்குதலுக்கு உள்ளாகி இருப்பதாக ராகுல் காந்தி கூறியது அப்பட்டமான உண்மை" என்கிறது காங்கிரஸ். தன்னுடைய பேச்சு குறித்து நாடாளுமன்றத்தில் விளக்கம் அளிக்க வாய்ப்பு தர வேண்டும் என ராகுல் காந்தி கோரிக்கை விடுத்தார். அதனை மக்களவைத் தலைவர் ஏற்கவில்லை.

இந்தியாவைப் பற்றி ராகுல் என்ன பேசினார்? மோடி என்ன பேசினார்? வெளிநாட்டில் பேசியதா? இந்தியாவில் பேசியதா? என்பது முக்கியமல்ல. ஒரு நாட்டின் மதிப்பு என்பது அதன் செயல் திறனை சார்ந்ததாகவே இருக்கிறது. அரசியல் உரிமை கோரல்களாலோ, அதற்கான மறுப்புகளாலோ இந்த மதிப்பு தீர்மானிக்கப்படுவதில்லை. இந்திய நாட்டிற்கும் இதுதான் பொருந்தும்.

ஜனநாயக நடைமுறைகளை அளவிடும் சர்வதேச குறியீடுகள் இந்தியாவின் நிலை மோசமாக இருப்பதையே வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன. மிகவும் மதிப்பு வாய்ந்த, பன்னாட்டு ஊடகங்கள் இந்தியாவின் ஜனநாயக மீறல்களை, அடக்குமுறைகளைக் கண்டிக்கின்றன. இந்தியாவின் மதிப்பையும் கௌரவத்தையும் இதுபோன்ற நடவடிக்கைகள் தான் தீர்மானிக்கின்றன. ஆக்ஸ்பாம், அம்னஸ்டி இன்டர்நேஷனல் போன்ற அமைப்புகள் வெளிநாட்டு நிதியுதவி பெறுவதற்கான உரிமங்களை ரத்து செய்தது; பி.பி.சி. செய்தி நிறுவனம் வெளியிட்ட ஆவணப்படத்தை தடை செய்ததுடன், பி.பி.சி. அலுவலகங்களில் வருமான வரித்துறை ஆய்வு நடத்தியது போன்றவை இந்தியாவின் மதிப்பை மோசமாக பாதித்துள்ளன.

உலக நாடுகளின் அரசியல் மற்றும் குடியுரிமை சுதந்திரத்தை மதிப்பிட்டு பிரீடம் ஹவுஸ் நிறுவனம் ஆண்டுதோறும் வெளியிட்டு வருகிறது. இதன் மதிப்பீட்டில், 'ஓரளவு சுதந்திரம்' உள்ள நாடாக இருந்த இந்தியா இப்போது பின்னடைவுக்குச் சென்றுள்ளது.

தி எகனாமிக் இன்டெலிஜென்ஸ் ஆண்டு தோறும் வெளியிட்டு வரும் ஜனநாயக குறியீடுகளில், 2014 ஆம் ஆண்டு 27வது இடத்தில் இருந்த இந்தியா, தற்போது 46 வது இடத்துக்குப் பின்னோக்கிச் சென்றுள்ளது. ஜனநாயக நாடு வகைப்பாட்டில் இருந்த இந்தியா, தற்போது 'குறைபாடுள்ள ஜனநாயகம்' என்ற வகைப்பாட்டில் வைக்கப்பட்டுள்ளது.

மனித சுதந்திரத்தின் நிலையை கேட்டோ இன்ஸ்டிடியூட் மதிப்பீடு செய்து வெளியிட்டு வருகிறது. இதன் மனித சுதந்திரக் குறியீடுகளில் 2015 ஆம் ஆண்டு 75வது இடத்தில் இருந்த இந்தியா, 2020 ஆம் ஆண்டு 111 வது இடத்துக்குப் பின்னடைந்து மோசமான நிலைக்குச் சென்றுள்ளது.

சுவீடன் நாட்டின் வி டெம் (V-Dem) நிறுவனம், உலக நாடுகளில் ஜனநாயக ஆட்சிகள் குறித்த மதிப்பீடுகளை அளவிட்டு வெளியிட்டு வருகிறது. அண்மையில் (2023) வெளியான அறிக்கையில், தாராளவாத ஜனநாயகத்தின் அளவீட்டில் இந்தியாவுக்கு 108 வது இடம்தான் வழங்கப்பட்டிருக்கிறது. மேலும், "கடந்த 10 ஆண்டுகளில் மிக மோசமான எதேச்சதிகார ஆட்சி நடக்கும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று" எனக் குறிப்பிட்டுள்ளது.

எல்லை கடந்த பத்திரிகையாளர்கள் (Reporters Without Borders) அமைப்பு, உலக பத்திரிகை சுதந்திரத்தின் நிலை குறித்த மதிப்பீடுகளை வெளியிட்டு வருகிறது. அதில், பத்திரிகை சுதந்திரத்தில் தற்போது 150 வது இடத்துக்கு இந்தியா சென்றுள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் இந்தியா 10 இடங்கள் பின்னோக்கிச் சென்று, பத்திரிகை சுதந்திரம் மோசமான நிலையில் இருப்பதை இந்த அளவீடுகள் வெளிப்படுத்துகின்றன.

இந்த அமைப்புகள் பயன்படுத்தும் அளவீடுகள் (Parameters) தவறானவை என்கிறது ஒன்றிய பாஜக அரசு. இந்தியா போன்ற சிக்கலான சமூக அமைப்பைக் கொண்ட நாடுகளை தரமதிப்பீடு செய்யும்போது, அதற்கான அளவீடுகளில் ஒரு சில குறைகள் ஏற்பட நேரிடலாம். ஆனால், ஒன்றிய அரசு அவற்றை ஊதிப் பெருக்கி மேற்கண்ட தர மதிப்பீடுகளே தவறானவை என்பது போன்ற கருத்துகளை உருவாக்க முயற்சித்தது. அதேநேரத்தில், ஒன்றிய அரசுக்கு சாதகமாக தரமதிப்பீடுகள் வெளியாகும் போது இந்த விமர்சனங்கள் நெருக்கடியை சந்தித்தன.

எப்படி இருப்பினும், இந்தியாவில் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக விழுமியங்களில் பெரும் சரிவு ஏற்பட்டிருப்பதை பன்னாட்டு அமைப்புகள் ஒரே மாதிரியாக சுட்டிக்காட்டி இருக்கின்றன.

**<u>எதார்த்தத்தில் ஒன்றிய அரசை விமர்சித்தாலோ, கருத்து வேறுபாடுகள் இருந்தாலோ அவர்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாவது உறுதி. அவர்கள் மீது தேசத் துரோக மற்றும் சட்ட விரோத நடவடிக்கைகள் (UAPA) தொடர்பான சட்டங்கள் பாய்கின்றன.</u>**

தனிநபர்கள், அமைப்புகள் மீது மட்டுமல்ல, எதிர்க்கட்சிகளின் குரலை ஒடுக்க வருமானவரித் துறை, அமலாக்கத்துறை, சிபிஐ போன்ற விசாரணை அமைப்புகள் ஏவி விடப்படுகின்றன. அவை சோதனை, விசாரணை, கைது என அடுத்தடுத்து எடுக்கும் நடவடிக்கைகள் மூலம் அச்சுறுத்தி வருகின்றன.

உச்சநீதிமன்றம் கூட இத்தகைய போக்குகளை பலமுறை கண்டித்திருக்கிறது. "சட்டத்தை செயல்படுத்தும் முறையே தண்டனையாக இருக்கிறது" என உச்சநீதிமன்றம் அதிருப்தி தெரிவித்துள்ளது. தேசத் துரோக மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டங்களை தவறாக பயன்படுத்துவதற்கும் உச்சநீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது.

"வெறுப்பூட்டும் பேச்சுக்களை தடுப்பதற்கான பல உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்ட போதிலும் யார் மீதும் நடவடிக்கை எடுப்பதில்லை" என உச்சநீதிமன்றம் வழக்கு ஒன்றில் அதிருப்தி தெரிவித்தது. (02.02.2023)

"தேசத் துரோக சட்டப்பிரிவின் கீழ் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளின் வரலாற்றைப் பார்த்தீர்கள் என்றால், தண்டனை விகிதம் மிகக் குறைவாகவே இருந்துள்ளதை அறியலாம். இந்த சட்டப்பிரிவு தவறாக பயன்படுத்தப்படும் விதத்தை, ஒரு மரத்தை அறுக்க கொடுக்கப்பட்ட ரம்பத்தை பயன்படுத்தி ஒட்டுமொத்த காட்டையே அழிப்பதற்கு இணையாக ஒப்பிடலாம்," என உச்சநீதிமன்றம் சாடியுள்ளது. (15.07.2021)

"தகவல் தொழில்நுட்ப சட்டத்தின் 66ஏ பிரிவின் கீழ் ஆயிரக்கணக்கான வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால், அந்த சட்டப்பிரிவு ரத்து செய்யப்பட்ட பிறகும் எப்படி அந்தப் பிரிவை சட்ட அமலாக்க அமைப்புகள் பயன்படுத்துகின்றன" என்றும் உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியது.


இந்தியாவின் இத்தகைய போக்கைப் புரிந்துகொள்வதற்கு பன்னாட்டு அமைப்புகளின் மதிப்பீடுகள் அவசியமா என்ன?

ஜனநாயகத்தில், அதுவும் தாராளவாத ஜனநாயகத்தில் எல்லாவற்றுக்கும் மேலாக சுதந்திரமாக கருத்து வேறுபாடு கொள்ளும் உரிமைதான் அடிப்படையானது. உண்மையான ஜனநாயகத்தில் அரசை விமர்சிப்பது நாட்டை அவமதிப்பதாக கூறப்படுவதில்லை. கூறப்படவும் முடியாது. இதற்கு மாறாக, இந்தியாவில் பிரதமரையோ, அரசின் முடிவுகளையோ விமர்சித்தால், நாட்டிற்கு, தேசத்திற்கு எதிராக இருப்பதாக கட்டமைக்கப்படுவதால் தான் ஜனநாயகத்தின் மாண்புகள் கேள்விக்குள்ளாகின்றன. ஜனநாயக விழுமியங்கள் சிதைக்கப்படுகின்றன.

ஜனநாயகத்தின் மாண்புகளும் விழுமியங்களும் காக்கப்பட்டால் தான் இந்தியாவின் மதிப்பு உயரும். இதற்கு எதிர்க்கட்சிகள் மீது புலனாய்வு அமைப்புகளை ஏவி விடுவது நிறுத்தப்பட வேண்டும். தேசத்துரோக மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகள் தொடர்பான சட்டங்களைப் பயன்படுத்துவது தடுக்கப்பட வேண்டும். தலித்துகள், சிறுபான்மையினர் மீதான தாக்குதல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். கலப்புத் திருமணங்கள் தடுக்கப்படக் கூடாது. கருத்து வேறுபாடு கொண்டவர்கள் மீது அடக்குமுறைகளை ஏவி விடக் கூடாது. இவற்றையெல்லாம் செய்தால்தான் சர்வதேச அளவில் இந்தியாவின் மதிப்பு உயரும்.

ஆனால், ஒன்றிய பாஜக அரசோ அதனை வழிநடத்தும் ஆர்.எஸ்.எஸ் அமைப்போ ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கொண்டவர்கள் இல்லை. நாடாளுமன்றத்தில் போதுமான விவாதங்களை நடத்தக்கூட தயாராக இல்லாத அவர்களால், ஜனநாயக விழுமியங்களை, அரசியல் சட்ட நெறிமுறைகளை எப்படிப் பின்பற்ற முடியும்?

உலக வரலாற்றில் மக்கள் தான் பாசிஸ்ட்டுகளுக்கு முடிவு கட்டியிருக்கிறார்கள். இந்தியாவிலும் முடிவு கட்டுவார்கள்.



வ. மணிமாறன்
பத்திரிகையாளர்
தொடர்புக்கு: 95000 01224

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 85 இதழ் 51

# முடக்குபவர்கள் முடக்கப்படுவார்கள்

இந்திய நாட்டில் நடைபெறும் ஒவ்வொரு அசைவுக்கும் முழுப் பொறுப்பெடுக்க வேண்டியது நாடாளுமன்றம் தான். நாட்டை நேசித்தவர்கள், பொது நலனுக்காக வாழ்க்கையே அர்ப்பணித்த தன்னலமற்ற தலைவர்கள், தீமை தடுத்து நன்மையை நிலை நிறுத்தும் வல்லுனர்கள், வசப்படுத்தும் பேச்சாளர்கள் என எவ்வளவோ பேர் இந்திய நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்திருக்கிறார்கள்.

அந்த நாடாளுமன்றம், இந்தக் கூட்டத் தொடர் முழுமையும் கூச்சலும் குழப்பமுமாக, நிலை தவறிக் கெட்டு நகர்ந்து கொண்டிருக்கிறது. ஏதொன்றையும் விவாதித்து, அதன் மேல் முடிவுக்கு வருவதற்குப் பதிலாக, எதையுமே விவாதிக்க விடாமல் தடுத்து, தனக்கேற்ற முடிவை நிலை நிறுத்த ஆர்எஸ்எஸ்–பாஜக அரசு இந்த ஜனநாயகப் படுகொலையை நிகழ்த்திக் கொண்டிருக்கிறது.

ஹிண்டன்பர்க் அறிக்கை, உலகில் மூன்றாம் நிலை பெரும் பணக்காரராக இருந்த கௌதம் அதானியின் சொத்து எவ்வாறு ஊதிப் பெரிதாக காட்டப்படுகிறது என்பதை அம்பலப்படுத்தியது. பல்வேறு தகிடுதத்தங்களின் மூலமாக அதானியின் பங்குகள், அதனுடைய உண்மை மதிப்பை விட ஏழு மடங்கு அதிகமாக காட்டப்பட்டது தெளிவானது.

அவர் பெரும் பணக்காரராக மதிப்பிடப்பட சில காரணங்கள் உண்டு. அதிக அளவில் லாபம் தரக்கூடிய சுரங்கங்கள், விமான நிலையங்கள், துறைமுகங்கள் உள்ளிட்ட பெரும் நிறுவனங்களை அவருக்கு மிக மிக மலிவான விலையில் மோடி அரசு கொடுத்தது. அவற்றின் லாபம் முதலீட்டாளர்களை ஈர்த்தது. பங்குகளின் மதிப்பு பலமடங்கு உயர்ந்தது. இதைக் காட்டி பல கோடிக்கணக்கான ரூபாய்களை வங்கி கடனாக அவர் வாங்கினார். அந்தப் பணத்தால் புதிய புதிய நிறுவனங்களை வாங்கிக் கொண்டே இருந்தார்.

முறைகேடுகளின் மூலமாக அவர் ஈட்டிய பல கோடிக்கணக்கான பணம், அவரது உறவினர்களின் பெயரில் இருந்த வெளிநாட்டு நிறுவனங்களுக்குச் சென்று, அங்கிருந்து மீண்டும் இந்தியாவிற்கு புதிய அந்நிய முதலீடு போலக் கொண்டுவரப்பட்டது. ஊதப்படும் பலூன் போல அவர் பேருருவம் எடுத்தார்.

அந்த பலூனில் ஊசி கொண்டு குத்தியது, ஹிண்டன்பர்க் அறிக்கை.

முதலீட்டாளர்களின் நம்பிக்கையை அதானி இழந்தார். அவரது நிறுவனங்களின் பங்குகள் மடமடவனச் சரிந்தன. சில நிறுவனங்களின் பங்குகள் 65 சதவீதம் வரையும், சில நிறுவனங்களில் 85 சதவீதம் வரையும் கூட விழுந்துவிட்டன.

அவர் துவக்க இருந்த சில நிறுவனங்களை நிறுத்தி விட்டார்.

ஆனால் பிப்ரவரி மாதம் 28 ஆம் தேதிக்கு பின்பு மீண்டும் அவரது பங்குகளின் விலை ஏறத் தொடங்கி இருக்கிறது. இது பலருக்கு புரியாத புதிராக இருக்கிறது. எந்த மோடி அரசு அவர் செயற்கையாக பிரம்மாண்ட உருவம் எடுப்பதற்கு காரணமோ, அதே அரசுதான் அவரது சரிவைத் தடுத்து நிறுத்தி தாங்குகிறது.

அரசாங்கத்தை நத்திச் செயல்படும் சலுகை சார் முதலாளித்துவம், அதற்கேற்றதாக துணை செய்யும் சர்வதேசக் கட்டமைப்பு, கருப்புப் பணம், போதைப் பொருள் கடத்தல் என பல்வகைக் காரணிகளை தீவிர விசாரணைக்கு உட்படுத்த வேண்டிய நேரம் இது. ஹர்ஷத் மேத்தா வழக்கில் நடத்தப்பட்டது போல, ஒரு நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் விசாரணைக்கு அதானி விவகாரம் உட்படுத்தப்பட வேண்டும்.

வியப்புக்குரிய முறையில் திடீரென உச்சநீதிமன்றம் உள் நுழைந்து இதை விசாரிக்க ஒரு குழுவை அமைத்திருக்கிறது. இந்த தலையீட்டை தற்செயலானதாகக் கருத முடியாது. இதன்படி விசாரனை பல ஆண்டுகள் நடக்கலாம். நடப்பது என்ன என மக்களுக்குத் தெரியாது. எல்லாம் மறந்து போன பின்பு, கடைசியில் ஏதோ ஒரு அறிக்கை வெளிவரும்.

ஆனால் நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணைக்கு இது உட்படுத்தப்பட்டால், உண்மையில் நடந்ததென்ன என்பதை ஒவ்வொரு நாள் விசாரணையின் போதும் நாட்டு மக்கள் அறிந்து கொள்வார்கள். அதைத் தடுப்பதற்காகத்தான் நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணைக்கு விட முடியாது என ஆர்எஸ்எஸ் – பாஜக அரசு மறுக்கிறது. இதற்காக நாடாளுமன்றமே முடங்கினாலும் அது கவலைப்படவில்லை.

நாடாளுமன்றத்தை நடத்தாமல் முடக்கும் ஆர்.எஸ்.எஸ்.–பா.ஜ.க.வினர், மீண்டும் நாடாளுமன்றம் செல்ல முடியாது என்ற நிலையை மக்கள் உருவாக்குவார்கள்.

## தீண்டாமைக் கொடுமைகளை கண்டித்து

# தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் ஆர்ப்பாட்டம்





நாடு முழுவதும் தலித் மக்கள் மீதான பாகுபாடுகளும், வன்கொடுமைகள் அதிகரித்வண்ணமுள்ளன. குடிநீரில் மனித கழிவுகளை கலப்பது. இரட்டை குவளை முறை, நில அபகரிப்பு, திருவிழாக்களில் பாகுபாடு, சுடுகாட்டு பிரச்சனை, குடிநீர் பிரச்சனை, படுகொலை செய்வது, ஆலய பிரவேச மறுப்புகள் என இன்றளவும் பல்வேறு வடிவில் சமூக புறக்கணிப்புகளும், அடக்குமுறைகளும் தொடர்கின்றன.

சமூக நீதிக்கு புறம்பான இத்தகைய செயல்களால் சமூக பதற்றங்கள் அதிகரிக்கிறது. இவைகளை கண்டிக்கும் வகையிலும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கான வன்கொடுமை இழப்பீடுகள் கோரியும், துணைக்கூறுத் திட்டங்களை அமல்படுத்த கோரியும், பஞ்சமி நிலங்களை மீட்கக் கோரியும், நிலச் சீர்திருத்த சட்டங்களை நாடு முழுவதும் அமல்படுத்த கோரியும் நாடு தழுவிய ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநில துணைத் தலைவர் பொ. லிங்கம் எக்ஸ்.எம்.பி. தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநில பொதுச் செயலாளர் மு.வீரபாண்டியன், அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்க தேசியத் தலைவர் நா.பெரியசாமி எக்ஸ். எம்.எல்.ஏ., தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் மாநில துணைத் தலைவர் எஸ்.கே.மகேந்திரன், மாணவர் பெருமன்ற மாநிலத் தலைவர் சீ.தினேஷ், மாநில செயலாளர் பா.தினேஷ், டி.லதா எக்ஸ்.எம்.எல்.ஏ., ஜி.மஞ்சுளா, லி.உதயகுமார், எஸ்.கே.சிவா, கீ.சு.குமார் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

# என் கவிதை பிரகடனம்!

எங்கே வாழ்க்கையின் அர்த்தங்களோ
அங்கே என் பயணம்!
எங்கே அகதிகள் கதியுறு வாரோ
அங்கே என் இதயம்!

எங்கே எல்லைக் கோடுகள் இல்லையோ
அங்கே என் உதயம்!
எங்கே அமைதியின் இன்னிசை எழுமோ
அங்கே என் சமயம்!

எங்கே உரிமைப் போர்க்கள மயமோ
அங்கே என் ஜனனம்!
எங்கே விடுதலை ஆர்த்தெழுந்திடுமோ
அங்கே என் நடனம்!

எங்கே கொல்லனின் உலைக்களமோ
அங்கே என் வேள்வி!
எங்கே ஏவு கணைகளின் தளமோ
அங்கே என் கேள்வி!

எங்கே வன்முறை ஆட்டங்களோ
அங்கென் முகவடுக்கள்!
எங்கே இனப்பகைத் தீ பரவிடுதோ
அங்கென் யுக வடுக்கள்!


எங்கே மொழிகள் ஸ்நேகித்திடுமோ
அங்கே என் கவிதை!
எங்கே இனங்கள் மோகித்திடுமோ
அங்கே என் சரிதை!

எங்கே பகையிடை நகை சுடர்ந்திடுமோ
அங்கே என் பெருமை!
எங்கே வீரத்தில் ஈரம் தென்படுமோ
அங்கே என் தகைமை!

எங்கே அணுயுத்தம் வேண்டப் படாததோ
அங்கே என் காட்சி!
எங்கே மனுவெறி தீண்டப் படாததோ
அங்கே என் மீட்சி!

எங்கே மனிதன் சுயமிழந் தானோ
அங்கே என் தேடல்!
எங்கே விளம்பரப் பேய் உறங்கிடுமோ
அங்கே என் பாடல்!

ஓங்குக ஓங்குக உலகக் கவிதை நாள்



– கவிஞர் பரிணாமன்



பினாய் விஸ்வம் எம்பி
தேசிய செயலாளர்

# திரிபுரா: காவிகளின் அச்சுறுத்தலை முறியடிப்போம்



**திரிபுரா மாநில ராம் நகர் தொகுதியின் காளிகாபூரில் பாதி எரிக்கப்பட்ட வீட்டின் முன் நாங்கள் நின்றோம். அந்தப் பயங்கர நாளில், திரிபுரா தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட தினத்தில் நிகழ்ந்தவற்றை நடுத்தர வயதுள்ள பெண்மணி எங்களிடம் கண்ணீருடன் விவரித்தார். அந்நாளில் தனது 12வயது மகனை ஒருபோதும் விட்டுவிடாதபடி அணைத்துக் கொண்டிருந்தார். அவர்களுடைய முகத்தில் அந்த அனுபவங்களின் துயரம் வெளிப்படையாக அப்போதும் நிறைந்திருந்தது.**

ராம் நகர் தொகுதி சட்டமன்ற இடத்தைப் பாஜக கட்சியிடமிருந்து இடது முன்னணி காங்கிரஸ் கூட்டு வென்றது. எல்லா தொகுதிகளையும் குறுக்குவழியில் எப்படியாவது கைப்பற்ற முயன்ற பாஜக கட்சி அதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவர்களால் அந்தத் தோல்வியை ஒப்புக்கொள்ள முடியவில்லை. விளைவு, அந்த இரவே அதுவரை காணாத மூர்க்கத்துடன் வன்முறையை அரங்கேற்றினர். இருள் கவியத் தொடங்கியதும், ஆர்.எஸ்.எஸ். – பா.ஜ.க. குண்டர்கள் விஸ்வஜித் குமார் (பெயர் மாற்றப்பட்டுள்ளது, பாதிக்கப்பட்டவர் தங்கள் அடையாளங்களைக் கூற இன்னும் அச்சப்படுகிறார்கள்) வீட்டை நிர்மூலமாக்கினர்.

தாயிடமிருந்து பெருகிய கண்ணீர் மகனின் முகத்தை நனைத்தது, அவன் சப்தமிட்டு அழத் தொடங்கினான். அங்கே பார்வையிடச் சென்ற எங்களுடன் திரிபுராவின் மேனாள் முதல்வர் மாணிக்சர்க்காரும் இருந்தார். அந்தத் தாயிடமும் மகனிடமும் ஆறுதல் கூறி தேற்றிய அவர், உயிரச்சம் காரணமாகத் தொலை தூர இடத்திற்குச் சென்ற தந்தையைக் குறித்துக் கேட்டார்.

கண்ணீரைத் துடைத்தெறிந்து உறுதியாக நிற்கும்படி கூறிய மாணிக் சர்க்கார் அவர்களுக்குத் தைரியம் அளித்தார். அது உண்மையில் பலனளித்தது. அந்தப் பையன் எங்களிடம் பேசத் தொடங்கினான், சற்று நேரத்தில் தாயும்கூட தேற்றிக் கொண்டு இயல்பாகச் பேசினார்.

வீட்டிலிருந்து நாங்கள் வெளியே வரும்போது, மாணிக் சர்க்கார் அந்தப் பையனின் தோளில் தட்டியபடி, “நீ வளர்ந்ததும் என்னவாக ஆவாய்?” என்று கேட்டார். பதில் மிகத் தெளிவாக வந்தது, “நான் ஒரு தோழன் ஆவேன்.” ஆம், அந்தச் சிறுவன், இன்று வலியும் எதிர்காலம் குறித்த கவலையும் நிறைந்த காலத்தைக் கடந்து கொண்டிருக்கும், திரிபுரா மக்களின் என்றும் இறவாத துணிச்சல், வீரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறான்.

திரிபுராவில் ஆர்.எஸ்.எஸ். – பா.ஜ.க. கட்டவிழ்த்துவிட்ட வன்முறை பின்னணியில், இடது முன்னணி காங்கிரஸ் கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு உண்மை கண்டறியும் நோக்கத்துடன் செல்வதென முடிவானது. அந்நோக்கத்தை மனதில் கொண்டு சிபிஐ, சிபிஐ(எம்) கட்சியின் தலைவர்கள் இளமரம் கரீம், பி.ஆர். நடராஜன், ஏ.ஏ. ரஹீம், காங்கிரஸ் தலைவர்கள் ரஞ்சித் ரெஞ்சன், அப்துல் காலிக் மற்றும் சிபிஐ பிரதிநிதியாக நானும் வன்முறை பாதித்த இடங்களுக்கு விஜயம் செய்தோம்.

**மேனாள் முதல்வர் மாணிக் சர்க்கார் உள்ளிட்ட மாநிலப் பிரிவு கட்சித் தலைவர்கள் எங்களுடன் இணைந்து கொண்டனர். முழுமையாக அடித்து நொறுக்கப்பட்ட வீடுகள், இரப்பர் தோட்டங்கள், எரிக்கப்பட்ட ஆட்டோக்களையும் குளங்களில் செத்து மிதக்கும் மீன்களையும் கண்டோம். வன்முறையாளர்களின் நோக்கம் மிகத் தெளிவானது. இடது, காங்கிரஸ் கூட்டணியைத் தீவிரமாக ஆதரித்து அதன் வேட்பாளர்களின் வெற்றிக்குப் பாடுபட்ட மக்கள் அனைவரையும் முழுமையாக வேதனையில் ஆழ்த்தி அச்சுறுத்துவதே நோக்கம். பெட்ரோல் குண்டுகள் பரவலாகப் பயன்படுத்தப்பட்டன. அடித்து உடைக்கப்பட்ட வீடுகளின் உருக்குலைந்த காட்சிகள் நெஞ்சைப் பிளப்பதாக இருந்தன.**

திரிபுராவுக்கு விஜயம் செய்யக் கூடிய எவரும் இந்துத்துவா பயங்கரவாதத்தின் எல்லை இல்லா அட்டூழியங்களைக் காண முடியும். வெறிபிடித்த போக்கிரித்தனமான அரசியல் கொள்கையின் வெற்றியைக் காண வேண்டுமானால் நீங்கள் திரிபுராவுக்கு வாருங்கள்.

ஜனநாயகம் என்பதற்கான அர்த்தத்தை ஒருபோதும் அறியாத அடியாட்கள், ஒன்றிய அரசின் முழுமனதான ஆதரவுடன், மாநிலம் முழுவதும் பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டனர். மூன்று பேர் உயிரிழந்தனர், ஆயிரக் கணக்கில் காயமடைந்தனர். நாடாளுமன்ற தூதுக் குழுவினர்கூட தாக்குதலிலிருந்து விட்டு வைக்கப்படவில்லை. இளமரம் கரீம் மற்றும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி பொதுச் செயலாளர் டாக்டர் அஜய் குமார் பயணம் செய்த வாகனங்களைப் பாஜக – ஆர்எஸ்எஸ் கிரிமினல்கள் தாக்கினர்.

எங்களது வருகை குறித்து முன்கூட்டியே தகவல் தந்த போதிலும் பாதுகாப்புக்காக வந்த மாநிலப் போலீஸ் தங்கள் மௌனமான ஆதரவைக் குண்டர்களுக்குத் தந்தனர். ஆனால் பாஜக மற்றும் அதனது தகவல் தொழில்நுட்பக் குழுக்கள் இதற்கு எதிரான பொய்யான கட்டுக் கதைகளைப் பரப்பினர். அதுதான் பொய்களின் கருத்தியல். வன்முறை கோலோச்சுவதன் காரணமாக ஆயிரக் கணக்கான மக்கள் தங்கள் வீடுகளிலிருந்து வெளியேறி தொலைவில் வசிக்க நிர்பந்திக்கப்படுகிறார்கள். தங்கள் தங்கள் வீடுகளில் உண்டு உறங்கி வாழ்வது என்ற மக்களின் அடிப்படை உரிமை, திரிபுராவில் தற்போது ஒரு பழங்கதை. மாநிலத்தில் 2018ல் பாஜக ஆட்சி அதிகாரத்திற்கு வந்தது முதல் பொதுமக்கள் திரளின் வாழ்க்கைக்குப் பாதுகாப்புக்கு உத்தரவாதமில்லை.

சட்டத்தின் வீழ்ச்சியும், அராஜகத்தின் எழுச்சியும் குறித்து மாநில ஆளுநருக்குத் தூதுக் குழு விரிவாக எடுத்துரைத்தது. ஆனால் இந்தக் கடுமையான பிரச்சனைக்கு ஆளுநரின் பதில் அப்பட்டமான புறக்கணிப்பே. பாஜக தலைமையிலான அரசு, சட்டமன்றத்தில் தங்கள் எண்ணிக்கையையும் வாக்கு சதவீதத்தையும் குறைத்த மக்களைப் பழிவாங்குகிறது. நடந்து முடிந்த தேர்தலில் பாஜக வென்ற இடங்கள் 11 குறைந்து விட்டது என்பதே காரணம்.

பதற்றமான ஆபத்தான சூழ்நிலையின் காரணமாக எங்களால், இளம் சிபிஐ வேட்பாளர் சத்தியஜித் ரியாங் போட்டியிட்ட சாந்தி பஜார் தொகுதிக்கு விஜயம் செய்ய முடியவில்லை. கைபேசி மூலமாக அவருடன் உரையாடியபோது பாஜக குண்டர்களின் வன்முறையை எதிர்பார்ப்பதாகக் கூறினார். அவரது குடும்பத்தினரின் ஒரே வாழ்வாதாரமான அவருடைய இரப்பர் தோட்டம் ஏற்கனவே அழிக்கப்பட்டு விட்டது.

சிபிஐ, சிபிஐ(எம்) மற்றும் காங்கிரஸ் கட்சிகளின் தொண்டர்கள் ஜனநாயகத்திற்கான தங்களின் போராட்டத்தைக் கைவிட மாட்டோம் எனத் தெளிவாக உறுதிபட உரைத்தனர். விஷக் கொடுக்குகளின் வன்முறையையும் வெறுப்பையும் கொண்டிருக்கும், பாசிச அரசுக்கு எதிராக திரிபுரா மக்கள் போராடிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்தப் போரில் திரிபுரா மக்களை நாம் கைவிட்டுவிடக் கூடாது. இந்த நாட்டின் ஜனநாயக உணர்வு நிலைக்கு திரிபுரா மக்களுடன் நமது அனைத்து வலிமைகளுடன் ஒன்றிணைந்து நின்றிட இதுவே சரியான உகந்த தருணம்.

பாசிசத்தை வீழ்த்துவோம், ஜனநாயகம் பாதுகாப்போம், திரிபுரா மக்களுக்கு ஆதரவாய் நின்றிடுவோம்!

தமிழில்: நீலகண்டன்

## அறிவிப்பு

தோழர்களே, 2023 மார்ச் 1ஆம் தேதி முதல் ஜனசக்தி சந்தா முடிவடைபவர்களுக்கு சந்தாவை புதுப்பிக்கும் வகையில் நினைவூட்டு தபால் கார்டு அனுப்பப்படுகிறது.

முடிவடையும் சந்தாதாரர்கள் ரூபாய் 750 செலுத்தி ஜனசக்தி சந்தாவை புதுப்பிக்க வேண்டுகிறோம்.

ஜனசக்தியின் வங்கிக் கணக்கிற்கு பணம் அனுப்பும் தோழர்கள் பணம் அனுப்பியதற்கான செலான் அல்லது அதற்குரிய விவரங்களை ஜனசக்தியின் ஈமெயில் அல்லது whatsappக்கு அனுப்ப வேண்டுகிறோம்.

நிர்வாகம், ஜனசக்தி

## அதானியைக் காப்பாற்ற ஜனநாயகத்தின் அடித்தளத்தை சிதைக்கிறார்கள்

தீவிர வலதுசாரிகளின் அரசியல் மற்றும் பெரும் பணக்காரர்களின் பேராசை ஆகியவை எப்போதும் ஒன்றாக கைகோர்த்து நிற்கின்றன. மோடியும் அதானியும் அந்த வர்க்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள். இந்தக் கூட்டணியின் நிர்ப்பந்தம் பாஜகவை நாடாளுமன்றத்தை சீர்குலைக்கும் நிலைக்கு இட்டுச் செல்கிறது. அதானியைக் காப்பாற்ற ஜனநாயகத்தின் அடித்தளத்தையே சிதைப்பது என முடிவு செய்துள்ளனர்.

– பினாய் விஸ்வம் எம்பி
தேசிய செயலாளர்



மாதர் அரங்கம்

# மகளிர் தினத்தில்
# ரோசா லக்ஸம்பர்க் நினைவுகள்

◆ டாக்டர் பி.வி.விஜயலெட்சுமி

**புரட்சிகர சோஷலிசவாதி, மார்க்சிய தத்துவ இயலாளர் மற்றும் போர் எதிர்ப்புச் செயல்பாட்டாளரான ரோசா லுக்ஸம்பர்க் 152வது பிறந்த நாளைக் கொண்டாடி மார்ச் 8 மகளிர் தினத்தில் அவரை நினைவு கூர்வோம்!**



'சீர்திருத்தமா அல்லது புரட்சியா' என்ற நூலில், 'முதலாளித்துவ முறைமையை முழுமையாகத் தூக்கி எறிவதன் மூலம் மட்டுமே உண்மையான மாற்றம் சாதிக்கப்பட முடியும்' என அவர் எழுதிய கருத்துகளை நினைவு கொள்வது ஆதர்சம் தரும், நம்மைச் செயல்பட உற்சாகமளிக்கும். மேம்பட்ட உலகு குறித்த லுக்ஸம்பர்க்கின் கண்ணோட்டம் இன்னும் அடைந்துவிடக்கூடியதாகவே உள்ளது, அது நனவாக்கப்படுவதை நோக்கி அனைவரும் செயல்பட அவரது உதாரணம் நம்மை ஊக்கம் பெறச் செய்யும்.

ரோசா 1871 மார்ச் 5ல் போலந்து நாட்டின் சாமொஸ்க்கில் நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தார்.

1887 வார்சா நகரில் படிப்பைத் தொடங்கிய லுக்ஸம்பர்க், பின்னர் சுவிஸர்லாந்து சென்று தனது கல்வியைத் தொடர்ந்தார். அங்கேதான் அவருக்குக் காரல் மார்க்ஸின் எழுத்துகள் அறிமுகமாயின, ஒரு சமூகச் செயற்பாட்டாளர் ஆனார். 1898ல் குஸ்தாவ் லூபெக்கைத் திருமணம் செய்து ஜெர்மனிக்குக் குடிபெயர்ந்தார்.

அங்கு ஜெர்மனி சமூக ஜனநாயகக் கட்சியில் (SPD) இணைந்தார். கட்சியில் வெகு விரைவில் புகழ்பெற்று முன்னணித் தலைவராக உயர்ந்தார். சமூக இயக்கத்தில் அவரது குரல் உயரிய மதிப்பு பெறலாயிற்று.

லுக்ஸம்பர்க், தொழிலாளர்கள் உரிமைகள் மற்றும் சமூகநீதிக்குத் தீவிரமாக ஆதரவு அளித்தார். முதலாளித்துவ முறைமை என்பது இயல்பிலேயே சுரண்டும் தன்மை கொண்டது என்பதிலும், உழைப்புக் கருவிகளின் கூட்டு சொத்துரிமை மூலம் மட்டுமே உண்மையான ஜனநாயகம் சாதிக்கப்பட முடியும் என்பதிலும் லுக்ஸம்பர்க் நம்பிக்கை உடையவர்.

மேலும், போர் மற்றும் இராணுவமயமாக்கலுக்கு லுக்ஸம்பர்க் தீவிர எதிர்ப்பாளர். முதலாம் உலகப் போரை மிகக் கடுமையாக வெளிப்படையாக அவர் விமர்சித்தார். அவரது போர் எதிர்ப்புச் செயல்பாடுகளுக்காக 1915ல் அவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அங்கிருந்தும் தொடர்ந்து செயல்பட்டும் எழுதியும் வந்தார், அவரது எழுத்துக்கள் முன்னிலும் அதிகமாகச் செல்வாக்கு செலுத்தத் தொடங்கியது.

20ம் நூற்றாண்டின் தொடக்க காலத்தின் அரசியல் மற்றும் அறிவார்ந்த பெரும் பரப்பில் ரோசா லுக்ஸம்பர்க் அழிக்க முடியாத அடையாளச் சுவட்டைப் பதித்துச் சென்றுள்ளார். அவரது காலத்தின் பெரும் செல்வாக்கு பெற்ற சிந்தனையாளர்கள், செயற்பாட்டாளர்களில் ஒருவராக அவர் விளங்கினார். உலகம் முழுமையிலும் சமூக மாற்றத்திற்கான இயக்கங்களை உற்சாகப்படுத்தினார்.

மார்க்ஸிய மற்றும் சோஷலிசக் கோட்பாடுகளில் லுக்ஸம்பர்க் ஆழமான பற்றுறுதி கொண்டார், உண்மையான ஜனநாயகம் மற்றும் சமூக நீதிக்கான திறவுகோல் உழைக்கும் வர்க்கத்திடம் இருப்பதாக நம்பினார். தொழிலாளர் உரிமைகளுக்குத் தீவிர ஆதரவாளரான அவர், முதலாளித்துவ முறைமை இயல்பிலேயே சுரண்டும் குணத்தை உள்ளார்ந்து கொண்டிருப்பதாகவும் நம்பினார்.

போர் மற்றும் இராணுவமயத்திற்குக் கடுமையான எதிர்ப்பாளரான லுக்ஸம்பர்க், போர் என்பதே முதலாளித்துவமுறைமையின் விளைபொருள் என உறுதியாக நம்பினார்; சர்வதேசப் புரட்சி மட்டுமே நிலையான சமாதானத்தைக் கொண்டு வர முடியும் என உரைத்தார்.

'தி ஜுனியஸ் பாம்லெட்' ('The Junius Pamphlet,') என்ற புகழ் பெற்ற அவரது கட்டுரையில், "செய்ய வேண்டிய உச்சபட்ச புரட்சிகரமான விஷயம், என்ன நிகழ்கிறது என்பதை எப்போதும் உரத்துப் பிரகடனம் செய்வதே" என்று எழுதினார். இந்த உணர்வு அவரது நம்பிக்கையைப் பிரதிபலித்தது. போரின் அநீதிக்கு எதிராக உரத்துக் குரல் எழுப்புவதும், மேலும் நியாயமான, அமைதியான உலகை நோக்கிப் பணியாற்றுவதும் முக்கியம் என அவர் உறுதியாக நம்பினார்.

தமது வாழ்நாள் முழுமையும் லுக்ஸம்பர்க் சமூக மாற்றத்திற்கான எண்ணிறைந்த போராட்டங்கள் மற்றும் இயக்கங்களில் ஈடுபட்டார். ஜெர்மனி சமூக ஜனநாயகக் கட்சியின் (SPD) தலைவரான அவர், புரட்சிகர சோஷலிசம் மற்றும் தொழிலாளர்கள் உரிமைகளுக்கு ஆதரவாக நின்றார். மேலும் 1918 1919 ஆண்டுகளில் நடந்த ஜெர்மன் புரட்சியில் முக்கிய பங்காற்றிய சமூக அமைப்பான 'ஸ்பார்டகஸ் லீக்' அமைப்பின் நிறுவன உறுப்பினராகவும் அவர் இருந்தார்.

லுக்ஸம்பர்க்கின் இலக்கியப் பங்களிப்புகளும் மிகவும் முக்கியமானவை. அவர் சளைக்காது பெருமளவு எழுதிக் குவித்தவர். மார்க்ஸிய தியரி, பொருளாதாரம் மற்றும் அரசியல் குறித்த அவரது படைப்புகள் இன்றைய நாள் வரை செல்வாக்கு மிக்கதாக விளங்குகின்றன. அவரது 'மூலதனத்தின் திரட்சி' நூலில் முதலாளித்துவத்தின் முரண்பாடுகள், தொழிலாளர்களைச் சுரண்டுவது குறித்து அவர் ஆய்வு செய்வார். 'ருஷ்யப் புரட்சி' நூலில் சோஷலிசத்தின்பால் போல்ஷ்விக்குகளின் அணுகுமுறையை விமர்சனம் செய்து, கூடுதல் ஜனநாயகம் மற்றும் புரட்சியில் பங்கேற்பு அணுகுமுறைக்காக வாதிடுவார்.

அவருடைய பல சாதனைகளையும் மீறி, லுக்ஸம்பர்க்கின் வாழ்க்கை துயரம் மேலிடும் வகையில் அகாலமான முடிவை எதிர்கொண்டது. 1919 ஜெர்மன் புரட்சியின்போது வலதுசாரி துணை இராணுவத்தைச் சேர்ந்த ஒருவனால் சுடப்பட்டு லுக்ஸம்பர்க் படுகொலை செய்யப்பட்டார். மரணமடைந்தபோது அவருக்கு 47வயதே ஆகியிருந்தது. அவர் கொல்லப்படுவதற்கு முந்தைய நாளில் கூட "புரட்சி மீண்டும் எழுச்சியுறும். அவை எழுப்பும் எக்காள ஒலி நான் வாழ்ந்தேன், வாழ்கிறேன், வாழ்வேன் என முழங்கி உங்களைத் திகிலுறச் செய்யும்" என எழுதியதில் வெளிப்படுகிறது ரோசா லக்சம்பர்க்கின் வைர நெஞ்சம்.

**உலகம் முழுவதும் நடைபெறும் சமூக நீதி இயக்கங்களுக்கு லுக்ஸம்பர்க்கின் மரபு தொடர்ந்து ஊக்கமளிக்கிறது. தொழிலாளர்களின் உரிமைகள், போருக்கு எதிரான செயலூக்கம் மற்றும் புரட்சிகர சோஷலிசத்தின் பால் அவருடைய பற்றுறுதி, நூறு ஆண்டுகளுக்கு முன்பு எப்படி இருந்ததோ அப்படி, இன்றும் பொருத்தமுடையதாக உள்ளன. 'சீர்திருத்தமா அல்லது புரட்சியா' என்ற நூலில், "எதிர்காலம் நம்முள் இருக்கிறது, மேலும் அது நமது இன்றைய செயல்களின் மேல் சார்ந்து இருக்கிறது" என்று எழுதினார்.**

அவர் மறைவைத் தொடர்ந்து மலர்ந்த சமூக மாற்றத்திற்கான பல இயக்கங்களில் லுக்ஸம்பர்க்கின் செல்வாக்கு இருப்பதை நாம் காணமுடியும். உலகம் முழுவதும் செயல்படும் சோஷலிசவாதிகள், பெண்ணியலாளர்கள், இனவெறிக்கு எதிரான செயற்பாட்டாளர்களால் அவருடைய கருத்துகள், சிந்தனைகள் ஏற்றுக் கொண்டாடப்படுகின்றன.

ரோசா லுக்ஸம்பர்க்கின் 152வது பிறந்த நாளில் நாம் அவரது வாழ்க்கை மற்றும் அவர் விட்டுச் சென்ற பாரம்பரியத்தை நினைவு கொள்வோம். அவர் தம் வாழ்வை அர்ப்பணித்த சமூக நீதிக்காகவும், தொழிலாளர் உரிமைகளுக்காகவும் போராட்டங்களைத் தொடர்வதன் மூலம் அவரது நினைவுக்கு நாம் மரியாதை செய்வோம்!

நன்றி: நியூஎஜ்
தமிழில்: நீலகண்டன்

---

# பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற பெண் கல்வி அவசியம்!

## எழுத்தாளர் அகிலா கிருஷ்ணமூர்த்தி பேச்சு

இந்திய மாதர் தேசிய சம்மேளனம் தஞ்சாவூர் தெற்கு மாவட்டம் சார்பில் சர்வதேச மகளிர் தின விழா கருத்தரங்கம் இந்தியகம்யூனிஸ்ட் கட்சிகூட்ட அரங்கத்தில் நடைபெற்றது.

நிகழ்விற்குமாதர்சங்கமாவட்ட செயலாளர் ம.விஜயலட்சுமி தலைமை வகித்தார். கருத்தரங்கத்தில் பங்கேற்ற இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் மாநிலத் தலைவர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.பத்மாவதி உரையாற்றுகையில், ஒன்றிய மோடி அரசு மத்தியில் ஆட்சிக்கு வந்த பிறகு பெண்கள், சிறுகுழந்தைகள் உள்ளிட்ட அனைவருக்கும் பாதுகாப்பு இல்லாத நிலை தொடர்கிறது.

இந்த நிலைமைகளை முறியடிக்க பெண்களாகிய நாம் அனைவரும் ஒன்றிணைந்து உறுதியான போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்று உரையாற்றினார்.

தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றத்தின் தஞ்சை மாநகரச் செயலாளர், எழுத்தாளர் அகிலா கிருஷ்ணமூர்த்தி உரையாற்றுவதில் மனித குலத்தில் முதன் முதலாக சமூகம் உருவானபோது பெண்கள்தலைமையிலான புராதான பொதுவுடைமை சமுதாயம்தான் முதலில் தோன்றியது. மனித குலவரலாற்றில் மனித கூட்டத்தை தலைமையேற்று வழி நடத்தியவர்கள் பெண்கள்தான். கிடைக்கின்ற உணவுகளை எல்லாம் பகிர்ந்து அளித்து உணவு உண்ணும் பொதுவுடைமை. தத்துவம் கோலோச்சி நின்றது. இத்தகைய பொதுவுடைமை அரசை வழி நடத்தியவர்கள் பெண்கள் தான் என்பதில் நாம் பெருமை கொள்ள வேண்டும். இதைத் தொடர்ந்து சமூகங்கள் மாறிய பொழுது பெண்கள் அடிமைப்படுத்தப் பட்டார்கள்.

என்னதான் ஆணுக்கு நிகராக பெண்கள் படித்து கல்வியிலும், வேலை வாய்ப்பிலும், விஞ்ஞான தொழில்நுட்பத்திலும் முன்னேறி வந்தாலும் எங்காவது ஒரு இடத்தில் பெண்கள் அடிமைப்படுத்தப்படுவது தொடர்ந்து நடைமுறையில் இருந்து வருகிறது. பொருளாதாரத்தில் பெண்கள் தன்னிறைவு பெறுவது என்பது கல்வி பயில்வதனால் மட்டுமே முடியும்.

ஆகவே பெண்கள் கல்வி மிக, மிக முக்கியமானது. ஒவ்வொரு. பெண் குழந்தையும் கல்வியறிவு பெறுவதற்கு பள்ளிக்கு அனுப்ப வேண்டும். உயர் படிப்பு வரை படிப்பதற்கு உற்சாகப்படுத்த வேண்டும், உதவிட வேண்டும். பெண்கள் அனைவருமே சமூக அறிவு பெறுவதற்கு, அரசியல் அறிவு பெறுவதற்கு, தங்கள் நிலைமையை உணர்வதற்கு கல்வியறிவு அவசியம் வேண்டும்.

சாதி, மதம்,சடங்குகள், வழிபாடுகள் என்கின்ற பெயரில் பெண்கள் அடிமைப்படுத்தப் படுவதை உணர்ந்து எதிர்க்க வேண்டும், போராட வேண்டும். சக மனிதர்களிடம் அன்பு செலுத்தி அவர்களுக்கான துயரங்களில் பங்கெடுக்க வேண்டும், மகளிர் தின வரலாறு என்பது நீண்ட நெடிய வலி நிறைந்த போராட்ட வரலாறு ஆகும், இந்த வரலாற்றை நினைவுகூர்ந்து பெண்களுக்கு எதிரான வன்கொடுமை உள்ளிட்டு, அனைத்து கொடுமைகளையும் முறியடிப்பதற்கும், பெண்கள் மேம்பாட்டுக்காகவும் நாம் அனைவரும் இயக்கமாக ஓரணியில் திரள வேண்டும் என சிறப்பு உரையாற்றினார்.

வகுப்புவெறி ஆர்.எஸ்.எஸ் – பா.ஜ.க. கூட்டை எதிர்த்து முறியடிக்க

# மே 5 முதல் 10 வரை மாபெரும் நடைபயணம்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலக் குழு முடிவு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு கூட்டம் சென்னை பாலன் இல்லத்தில் மார்ச் 18, 19 தேதிகளில் டி.எம். மூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

தேசிய செயலாளர் டாக்டர் கே. நாராயணா கூட்டத்தில் பங்கேற்று அரசியல் விளக்க உரையாற்றினார். தமிழக அரசியல் அறிக்கையை மாநிலச் செயலாளர் இரா.முத்தரசனும், செயல்பாட்டு அறிக்கையை மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியனும், அமைப்பு நிலை குறித்த அறிக்கையை மாநில துணைச் செயலாளர் நா.பெரியசாமியும் அறிமுகம் செய்து பேசினர். இதன் மீது மாநிலக் குழு உறுப்பினர்கள் விவாதித்தனர். அவர்கள் முன்வைத்த திருத்தங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்டவைகளை சேர்த்து அறிக்கைகள் நிறைவேற்றப்பட்டன.

**மே 5 முதல் மே 10 வரை நடைபயணம்**

பெருமுதலாளிகளுக்கு ஆதரவாகவும், உழைக்கும் மக்கள், தலித்துகள், சிறுபான்மையினருக்கு எதிராகவும் செயல்படும் மதவெறி, வகுப்புவாத சக்தியான ஆர்.எஸ்.எஸ்.–பா.ஜ.க. கூட்டை எதிர்த்து முறியடிப்பது கம்யூனிஸ்ட்களின் கடமை. அதன் மக்கள் விரோதப் போக்கை ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை நன்கு வெளிப்படுத்துகிறது. இந்த அழிவு சக்திக்கு எதிராக விரிவடைந்த ஜனநாயக, மதச்சார்பற்ற, இடதுசாரி ஒன்றுமையைக் கட்டுவது காலத்தின் கட்டாயமாகும். நாம் மக்களிடம் சென்று நிலைமைகளை விளக்கி உணர வைக்க வேண்டும்.

விரிவான நடைபயணங்களை திட்டமிட்டு மேற்கொள்ளுமாறு புதுச்சேரியில் கூடிய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக்குழு கூட்டம் அறைகூவல் விடுத்துள்ளது. அதன்படி தமிழ்நாட்டில், மே 5 முதல் மே 10 வரை நடைபயணம் மூலம் பரப்புரை இயக்கத் திட்டங்களை விளக்கி செயற்குழு உறுப்பினர் க.சந்தானம் முன்மொழிந்ததை கூட்டம் ஏகமனதாக ஏற்றது. இளைஞர் பெருமன்ற பரப்புரை பயணம் குறித்து பெருமன்ற மாநிலச் செயலாளர் க.பாரதி விளக்கினார். அனைத்து ஒத்துழைப்பையும் நல்க கூட்ட முடிவு செய்தது.




ஜனசக்தி சந்தா இயக்கம் குறித்து ஆசிரியர் டி.எம்.மூர்த்தி, தாமரை சந்தா குறித்து ஆசிரியர் சி.மகேந்திரன் ஆகியோர் பேசினர். மாவட்ட வாரியாக தோழர்கள் தமது கருத்துக்களைத் தெரிவித்து முழுத் திறனோடு இயங்கி சந்தா இலக்குகளை எட்ட உறுதியளித்தனர்.

கட்சி வளர்ச்சி நிதிக்கான இலக்குகளை கூட்டம் விவாதித்து நிச்சயித்தது. மாநிலக் குழு உறுப்பினர்கள் தமது நிதி பங்களிப்பை அவர்களாகவே அறிவித்தனர். பலர் கூட்டத்திலேயே தமது நிதியைத் தந்தனர். கடைகள், வீடுகள்தோறும் அணி அணியாக சென்று கட்சி வளர்ச்சி நிதி திரட்டுவதான கூட்டம் முடிவு செய்தது.



- ஆன்லைன் ரம்மி விளையாட்டுக்கு தடை விதிக்கும் சட்ட முன்வடிவை திரும்ப அனுப்பிய ஆளுநரின் நடவடிக்கைக்கு கூட்டம் கண்டனம் தெரிவித்தது.
- ஊராட்சிகளுக்கு மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்;
- ஐம்பதாயிரம் மாணவர்கள் தேர்வுக்கு வராததின் காரணங்களை சரியாகக் கண்டறிந்து தீர்வு காண வேண்டும்;
- பால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க தமிழ்நாடு அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்;
- திடக்கழிவு மேலாண்மை என்ற பெயரில் தூய்மைப் பணியாளர்களின் வேலையைப் பறிப்பதை கைவிட வேண்டும்;
- அரசு ஆரம்ப சுகாதார நிலைய தூய்மைப் பணியாளர்களை நிரந்தரப்படுத்தி ஊதியம் வழங்க வேண்டும்;
- தரணி சர்க்கரை ஆலையை திறக்க ஆவன செய்ய வேண்டும்

–என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

# ஆன்லைன் சூதாட்டத் தடை சட்டம் 2ஆம் முறையாக நிறைவேற்றம்

## ஆளுநர் ஒப்புதல் அளிக்க இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

தமிழ்நாட்டில் தீவிரமான எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தி வரும் ஆன்லைன் சூதாட்டத்தை தடை செய்யுமாறு ஒட்டு மொத்த மக்களும் வலியுறுத்தி வந்தனர். சென்னை உயர் நீதிமன்றம் சட்டம் இயற்றுமாறு ஆலோசனை கூறியது. இதனைத் தொடர்ந்து கடந்த 2022 அக்டோபர் முதல் தேதியில் ஆன்லைன் சூதாட்டத்தை தடை செய்யும் அவசர சட்டத்தை தமிழ்நாடு அரசு நிறைவேற்றியது. இதற்கு அப்போது உடனடியாக ஆளுநர் ஒப்புதல் அளித்துள்ளார்.

இதன் பிறகு அவசர சட்டத்திற்கு பதிலாக நிரந்தரச் சட்டம் நிறைவேற்ற வழிவகுக்கும் சட்ட மசோதா சட்டமன்றப் பேரவையில் 2022 அக்டோபர் 19 ஆம் தேதி நிறைவேற்றப்பட்டு ஆளுநர் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு அனுப்பி வைத்த சட்டம் குறித்து சில விளக்கங்களையும், கேள்விகளையும் எழுப்பி, அதனை தமிழ்நாடு அரசுக்கு ஆளுநர் திருப்பி அனுப்பினார். தமிழ்நாடு அரசு ஆளுநர் சந்தேகங்களை நீக்கும் வகையில் விளக்கங்களையும், பதிலும் தெரிவித்து உடனடியாக ஆளுநருக்கு மீண்டும் அனுப்பி வைத்தது.

இதனைப் பெற்றுக் கொண்ட ஆளுநர், நீண்ட தாமதத்திற்கு பின்னர் ஆன்லைன் சூதாட்ட விளையாட்டு குறித்து சட்டம் நிறைவேற்ற தமிழ்நாடு அரசுக்கு உரிமை யில்லை எனக் கூறி மீண்டும் திருப்பி அனுப்பிவிட்டார்.

இதுகுறித்து நாடாளுமன்றத்தில் கேள்வி எழுந்த போது, ஆன்லைன் சூதாட்ட விளையாட்டு குறித்து சட்டம் இயற்ற மாநில அரசுகளுக்கு உரிமை உண்டு என்றும், அதன்படி சில மாநிலங்களில் ஆன்லைன் சூதாட்டம் தடை செய்து சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கும் தகவலும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஆன்லைன் சூதாட்ட விளையாட்டை தடை செய்யும் சட்டத்தை மீண்டும் (இரண்டாவது முறையாக) நிறைவேற்றி இருப்பதையும் “மனசாட்சியை உறங்க வைத்து விட்டு, ஆட்சி நடத்த முடியாது” என்று உறுதிபட தெரிவித்த முதலமைச்சர் கருத்தையும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வரவேற்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.


PRESS & REGISTRATION OF BOOKS ACT, 1867

Registration of Newspapers (Central) Rules. 1956

FORM IV (SEE RULE 8) statement about

Ownership & other particulars about Newspaper

JANASAKTHI TAMIL WEEKLY


| | | | |
|---|---|---|---|
| 1. | Place of Publication | : | 43, Chevalie Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai-17 |
| 2. | Periodicity of its Publication | : | Weekly |
| 3. | Printer's Name | : | A.Sivakumar |
| | Nationality | : | Indian |
| | Address | : | 142/16 Jani Jan khan Roan, Royapettah, Chennai-14 |
| 4. | Publisher's Name | : | R.Mutharasan |
| | Nationality | : | Indian |
| | Address | : | 43, Chevalie Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai-17 |
| 5. | Editor's Name | : | K.Subbarayan |
| | Nationality | : | Indian |
| | Address | : | 43, Chevalie Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai-17 |
| 6. | Name and Address of Shereholders holding more than one percent of the Share Capital | : | R.Mutharasan 43, Chevalie Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai-17 |

I, R.MUTHARASAN hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief

Dated: 04.03.2023 Signature of Publisher: R.MUTHARASAN

# எங்கே எனது வேலை?

# 8 அம்ச கோரிக்கைகளை வலியுறு



"பாலுக்கு அழும் குழந்தை, கல்விக்கு ஏங்கும் மாணவன், வேலை தேடும் இளைஞன்; இவைகள் இல்லாத இந்தியாவே சுதந்திர இந்தியா" என்றார், பகத்சிங்.

அதற்காகவே தனது நண்பர்களுடன் இணைந்து, 'இந்திய குடியரசுச் சங்கம்' உருவாக்கியவர் பகத்சிங். அதன்பிறகு நவஜவான் பாரத் சபை என்ற அமைப்பையும் உருவாக்கினார். விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களின் சுதந்திரக் குடியரசை நிறுவுவதுதான் இந்த அமைப்பின் நோக்கமாக அறிவிக்கப்பட்டது.

இளைஞர்கள், தொழிலாளர்கள், விவசாயிகளைத் திரட்டுவதன் மூலமாக சுதந்திரத்தை அடைய முடியும் என நினைத்தார். தனது இறுதி இலக்கு சோசலிசம்தான் என்று அறிவித்தார்.

அதனால், 1928 ஆம் ஆண்டு தனது அமைப்பின் பெயரை இந்துஸ்தான் சோசலிஸ்ட் குடியரசு சங்கம் என்று பெயர் மாற்றிக் கொண்டார், பகத்சிங்.

"தொழிலாளி வர்க்கம் அந்நிய மூலதனத்தின் தாக்குதல், இந்திய மூலதனத்தின் தாக்குதல் என்ற இரண்டையும் எதிர்கொள்கிறது. சோசலிசம்தான் முழு சுதந்திரத்தையும் வழங்கும்" என்றார் பகத்சிங். "புரட்சியாளன் என்றால் புதிய சமுகத்தைப் படைக்க மக்களுடன் பணியாற்றுபவன் என்று பொருள்" என்றவர் அவர்.

1929 ஏப்ரல் 28 அன்று நாடாளுமன்றத்தில் குண்டு வீசினார் பகத்சிங். 'இன்குலாப் ஜிந்தாபாத்' என்றுதான் அவர் முழங்கினார்.

நாடாளுமன்றத்தின் மீது குண்டு வீசிய பகத்சிங், "இந்தியாவின் கோடான கோடி மக்களின் உழைப்பினால் ஆன பணத்தை செலவு செய்து ஆடம்பரமாகவும், பகட்டாகவும் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்தப் பாராளுமன்றம் போலித்தனமும், பாசாங்கும் நிறைந்து உழைக்கும் மக்களுக்கு கேடுகள் விளைவிக்கக் கூடாது" என்று சொன்னார் பகத்சிங்.

"உணவை உற்பத்தி செய்யும் விவசாயி பசியோடு இருக்கிறார். துணி நெய்து கொடுப்பவர்களின் குழந்தைகள் துணியில்லாமல் இருக்கிறார்கள். ரத்தத்தை உறிஞ்சும் அட்டைகளாக முதலாளிகள் இருக்கிறார்கள். இந்த சூழ்நிலை வெகுகாலம் நீடிக்காது. இந்த சமூகத்தை மாற்றும் எரிமலைகள் நாங்கள்" என்று நீதிமன்றத்தில் சொன்னார், பகத்சிங்.

இதற்காக மாவீரன் பகத்சிங் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டு 1931 மார்ச் 23ந் தேதி தூக்கிலிடப்பட்டார்.

அவர் கொல்லப்பட்டு 93 ஆண்டுகள் ஆகிறது. விடுதலைபெற்ற இந்தியாவின் நாடாளுமன்றம் போலித்தனமும், பாசாங்கு நிறைந்ததாகவே இருந்து வருகிறது.



க.பாரதி

இந்த நாடாளுமன்றத்தில் பிரதமராக தேர்வு செய்யப்படுவதற்காகதான் நரேந்திர மோடி அவர்கள் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இந்திய குடிமகன்கள் ஒவ்வொருவருடைய வங்கிக்கணக்கிலும் 15 லட்ச ரூபாய் வைப்புதொகையாக வழங்குவேன் என்று வாக்குறுதியளித்தார். ஆனால், ஆட்சிக்கு வந்த பிறகு, இது நாள் வரை உழைக்கும் மக்களின் சேமிப்பிலிருந்து உருவான பத்து லட்சத்து எழுபத்திரண்டாயிரம் கோடி ரூபாயை எடுத்து பெருமுதலாளிகளுக்கு வழங்கியுள்ளார்.

பணமதிப்பு நீக்கம், ஜி.எஸ்.டி போன்ற நாசகர திட்டங்களை கொண்டுவந்து சிறு, குறுந்தொழில்களை சீரழித்து கோடிக்கணக்கான மக்கள் தாங்கள் ஏற்கனவே செய்து வந்த தொழிலிலிருந்தே வெளியேற்றியுள்ளார்.

கடந்த நான்கரை ஆண்டுகளில் சிறு வர்த்தகத் துறையிலும், சிறு, குறு, நடுத்தர தொழில்களிலும் 35 லட்சம் வேலைகள் இழக்கப்பட்டிருப்பதாக அனைத்திந்திய உற்பத்தியாளர்கள் அமைப்பு ( All India Manufacturers Organisation) நடத்திய சர்வேயில் தெரிய வந்துள்ளது.

மோடி ஆட்சிக்கு வந்த 2014ஆம் ஆண்டுக்குப் பிறகு, பல இன்னல்களை தொழில்துறையினர் சந்தித்துள்ளது வெளிப்பட்டுள்ளது. வர்த்தகப் பிரிவில் 43% வேலையிழப்பு ஏற்பட்டுள்ளதாகவும், குறுந்தொழில் பிரிவில் 32%, சிறு தொழில் பிரிவில் 35%, நடுத்தர தொழில் பிரிவில் 24% வேலையிழப்பு ஏற்பட்டுள்ளதாக ஆய்வு சொல்கிறது.

இதற்கு முக்கியக் காரணமாக உற்பத்தியாளர் சங்கம் கூறுவது, 2015–16 ஆண்டுகளில் புதிய அரசாங்கம் பதவியேற்றதால் ஏற்பட்ட நம்பிக்கையின் காரணமாக எல்லாத் தொழில்களும் வளர்ந்தன.

அதற்கு அடுத்த ஆண்டில் வந்த பணமதிப்பு நீக்க நடவடிக்கையினாலும், பின்னர் ஜி.எஸ்.டி. அமுலாக்கச் சிக்கல்களினாலும் வீழ்ச்சி ஏற்பட்டது. அதற்குப் பின் நிதி இல்லாமையாலும், அரசாங்கத்திலிருந்து வரவேண்டிய தொகை நிலுவையின் காரணமாகவும் வீழ்ச்சி தொடர்கிறது.

இணைய வர்த்தகமும் மிகப்பெரும் சவாலாக மாறி சில்லறை வர்த்தகர்களைச் சூறையாடி வருகிறது. சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் மலிவு விலை சூரிய சக்தி தகடுகளால், இந்தியாவில் உள்ள நிறுவனங்கள் மூடப்பட்டு, சுமார் 2 லட்சம் பேர் வேலை இழந்துள்ளதாக நாடாளுமன்றக் கமிட்டி, அறிக்கை அளித்துள்ளது.

வேலை செய்ய அனைத்துத் தகுதிகளும் இருந்தும் 27 சதவீத பேருக்கு வேலை இல்லை என்கின்றது, குளோபல் ஹியூமன் கேபிடல் ஆய்வு. ஒரு நாட்டில் வேலைவாய்ப்பு பெருக வேண்டும் என்றால் ஏற்றுமதி அதிகமாகவும், இறக்குமதி குறைவாகவும் இருக்க வேண்டும். அப்போதுதான் பல புதிய தொழில்நிறுவனங்கள் நிறுவப்பட்டு புதிய வேலைவாய்ப்புகளை வழங்க முடியும்.

ஆனால் மோடி அரசு பதவியேற்றதில் இருந்து ஏற்றுமதி குறைந்து, இறக்குமதி மிகப்பெரிய அளவில் அதிகரித்திருக்கின்றது.

சமீபத்திய காலங்களில் பண நெருக்கடி, உற்பத்திக் குறைவு அதன் காரணமாக ஏற்படும் வேலை இழப்புகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. வேலை

# தமிழ்நாடு வேளாண் நிதிநிலை அறிக்கை: தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் பாராட்டு

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச்செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

மூன்றாம் ஆண்டாக வேளாண்மைக்கு தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்து ;கடந்தாண்டை விட ரூ.5897 கோடி கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதை தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வரவேற்கிறது. இதில் வேளாண்மை பயிர்கள் அனைத்தின்மீதும் கவனம் செலுத்தப்பட்டு அதன் மேம்பாட்டிற்கான திட்டநிதி அறிவிக்கப்பட்டுள்ளது. தரிசு நில மேம்பாடு, இதில் தானிய உற்பத்தி, கூடுதல் தென்னை வளர்ப்பு, சிறு தானிய ஆண்டை வரவேற்றிடும் நிலையில் அனைத்து சிறு தானியங்களையும் சாகுபடி செய்ய வாய்ப்புள்ள மாவட்டங்களில் கூடுதல்சாகுபடி மற்றும் அதனை மதிப்பு கூட்டப்பட்ட பொருளாக மாற்றி விற்பனை செய்வதற்கு உதவுதல், சிறுதானியங்களை அரசு கொள்முதல் செய்வது, பொது விநியோக அங்காடிகளில் விற்பனை செய்வது, அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் சிறுதானிய உணவு அங்காடிகளை திறப்பது என்பது வரவேற்கத்தக்கது.

உணவே நஞ்சு, உடலே வியாதி என்ற நிலையில் இருந்து மக்களை மீட்டிட உயிர்மை வேளாண்மை கொள்கை அறிவிக்கப்பட்டு அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது வரவேற்கத்தக்கது. பாரம்பரிய மரபு சார்ந்த விதைகள் உற்பத்தியை பெருக்குவது அதன் சாகுபடிஉயர்விற்கான ஊக்கத்திட்டம். இதில்அதிக உற்பத்தி பெறுகிறவருக்கு நம்மாழ்வார் விருது என்பது பாராட்டத்தக்கது.

அதுபோல் தமிழகத்தில் ஒரு சில மாவட்டங்களில் விளையும் அனைத்து பயிர்களின் மீதும் கவனம் செலுத்தப்பட்டிக்கிறது. முருங்கை சாகுபடியை ஊக்கப்படுத்தும் நிலையில் அவைகளை மதிப்பு கூட்டப்பட்ட பொருளாக மாற்றுவது, வாழை, முந்திரி, பூக்கள், தக்காளி, மிளகாய் போன்ற வேளாண் உற்பத்தி பொருளுக்கும் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதனுடைய சந்தை வாய்ப்புகளை பெருக்கிடதிட்டமிடப்பட்டுள்ளது. அழுகும் வேளாண் உற்பத்தி பொருட்களை உரியநிலையில் பாதுகாத்து வருடம் முழுவதும் விற்பனைக்கு விடப்பட்டால் நுகர்வோர்களுக்கு நியாயமான விலையும், உற்பத்தியாளர்களுக்கு நஷ்டமில்லா விலையும் கிடைக்கும் என்ற எங்கள் கோரிக்கையின்படி அரசு அதற்கான கட்டமைப்புகளைஉருவாக்க அறிவித்திருப்பதை பாராட்டுகிறோம்.

வேளாண்மையை அடிப்படைவாழ்வு நிலைகளாகக் கொண்ட டெல்டா மாவட்டங்களில் திருச்சி முதல் நாகப்பட்டினம் வரை வேளாண் தொழில் மண்டலத்திற்காக ரூ.1000 கோடி ஒதுக்கீடுசெய்து இருப்பதை மகிழ்வுடன் வரவேற்கிறோம்.

வேளாண் உற்பத்தியின் போது ஏற்படுகிற பிரச்சனைகளை உடனுக்குடன்தீர்வு கண்டிட வருவாய் கிராமம் தோறும் ஒருவேளாண் அலுவலர்நியமிக்கப்பட வேண்டும் என்கிற எங்கள் கோரிக்கை ஓரளவு ஏற்கப்பட்டு மூன்று பஞ்சாயத்துகள் வரை ஒரு அலுவலர் என்று நியமிக்கப்பட உள்ளது.

ஆனால் ஒவ்வொரு வருவாய் கிராம அளவிலும் வேளாண் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் உள்ளிட்ட விவசாயிகள் பங்கேற்புடன் தூர்வாருதல் உள்பட பாசன கட்டமைப்பை மேம்படுத்திட பராமரித்திட அனைத்து வேளாண் பணிகளும் நிறைவேற்றிட வேண்டும் என்ற எங்கள் கோரிக்கை பரிசீலிக்கப்பட வேண்டும்.

கடந்த மூன்று ஆண்டுகளாக விவசாயிகள் வலுவாக கோரி வருகிற தேர்தல் கால வாக்குறுதியான நெல் குவிண்டால் ரூ.2500, கரும்பு டன் ரூ.4000 என்பது நிராகரிக்கப்பட்டு நெல் ரூ. 100 மற்றும் ரூ.75 என்ற உயர்வு மட்டுமே, கரும்புடன் ஒன்றுக்கு ரூ.195 மட்டுமே கொடுப்பது என்பது இன்றைய வேளாண் உற்பத்தி செலவுக்கேற்ப எந்த வகையிலும் பொருத்தமல்ல.

கடந்த சில ஆண்டுகளாக தமிழகத்தில் மூடப்பட்டுள்ள தனியார் சர்க்கரை ஆலைகளை திறப்பதற்கும் விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டிய நிலுவைத் தொகை மற்றும் கடன் தீர்விற்கும் உரிய அறிவிப்பு இல்லை. ஒன்றிய அரசால் தற்போது தமிழகத்தில் வழங்கப்பட்டு வருகிற செறிவூட்டப்பட்ட அரிசி பற்றிய தமிழக அரசின் நிலைப்பாட்டை அறிவிக்கவில்லை.

நெல் பயிருக்கு மட்டுமாவது தமிழக அரசே காப்பீடு திட்டத்தை நடத்திடவேண்டும் என்ற எங்கள் கோரிக்கையை பரிசீலிக்கவேண்டும். பால் கொள்முதல் விலை உயர்வு வெளியிட வேண்டும். உரிதேங்காய் கொள்முதல் நிலையம் மாவட்டத்திற்கு ஒன்று திறந்திட வேண்டும். கூட்டுறவு துறையின் வேளாண்மை கடன்களுக்காக கடந்தாண்டு தொகையை கூடுதலாக்கி ரூ.14,000 கோடியாக உயர்த்தி அறிவித்திருப்பது மிக மிகப் பாராட்டத்தக்கது.

இதில் நகைக் கடன்களை அதிகமாக்கி, பயிர் கடன்களை குறைப்பதை கைவிட்டு புதிய உறுப்பினர்கள்அனைவருக்கும் கடன் கிடைக்கச் செய்வதை உறுதிப்படுத்திட வேண்டும். எதிர்பாரா இயற்கை இடர்பாடு என்பது தொடர்ந்து தமிழகத்தை பாதித்து வரும் நிலையில் ஒன்றிய அரசின் தேசிய பேரிடர் வரன்முறை நிபந்தனைகளில் தற்போதைய வேளாண் உற்பத்தி செலவுக்கு ஏற்ப நிவாரணத் தொகையை கூடுதலாக்கிட ஒன்றிய அரசிடம் வலியுறுத்திட வேண்டும். அதுவரை தமிழக அரசே இதற்கான வரையறுக்கப்பட்ட நிதி உயர்வு ஒதுக்கீட்டை நிரந்தர திட்ட நிவாரண நிதியாக ஒதுக்கீடு செய்திட வேண்டும். எஞ்சிய திட்டங்களையும் வேளாண்மை அறிக்கை நிறைவில்இணைத்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

# த்தி ஏப்.2 திருச்சியில் இளைஞர் எழுச்சி மாநாடு

இழப்பு மட்டுமல்ல அதிகப்படியான இந்திய மக்கள், பெரும்பான்மையான வணிகர்கள் நிறுவனமயப்படாத முறைசாராத் தொழில்களில்கள் மற்றும் விவசாயத்தில்தான் ஈடுபட்டு வருகிறார்கள். அதில் ஏற்பட்டுள்ள பாதிப்பின் எதிரொலி இன்று சமூகத்தில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குக் காரணம்.

இந்தியா எப்போதும் தற்சார்பு வாழ்வியலையும், பொருளாதார அமைப்பையும் கொண்டது. அந்த அடிப்படை தகரும்போது ஏற்படும் பிரச்சனைகள் தான் இவை.

இதனால் வேலையின்மை நெருக்கடி பன்மடங்கு அதிகரித்து வருகிறது. “எங்கே எனது வேலை” என கேட்கும் இளைஞர்களிடம் பக்கோடா விற்கச் சொல்கிறது.

எல்ஐசி உள்ளிட்ட லாபம் ஈட்டும் பொதுத்துறை நிறுவனங்களை தனியார்மயமாக்கி வருகிறது. அம்பானி, அதானி போன்ற பெருமுதலாளிகளை மேலும் செல்வந்தர்களாக்கி வருகிறது. மோடியின் அனைவருக்குமான வளர்ச்சி என்பது ஏமாற்று வித்தையாக மாறியுள்ளது.

இந்தியாவில் நகர்ப்புறங்களில் உள்ள 23 சதவிகிதம் இளைஞர்கள் வேலையற்றவர்களாக உள்ளனர். 2021 நவம்பர் மாதம் மட்டும் மாதச் சம்பளம் பெற்றுவந்த 68 லட்சம் பேர் வேலையிழந்துள்ளனர். கொரோனா காலத்தில் மட்டும் 20 கோடி பேர் வரை வறுமையில் வீழ்ந்திருக்கின்றனர்.

வேலையின்மையால் 2018, 2019, 2020ஆம் ஆண்டுகளில் 9140 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். ஆண்டுக்கு ஆண்டு வேலையின்மையின் காரணமாக தற்கொலை செய்து கொள்வோர் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது. வேலை வாய்ப்புகளை உருவாக்க முடியாத ஆளும் அரசாங்கத்தின் திறமையின்மையையே இது காட்டுகிறது.

தமிழ்நாட்டில் 2021 ஆம் ஆண்டு கணக்கின்படி வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள இளைஞர்களின் எண்ணிக்கை 67லட்சத்திற்கும் மேலாகும். டிசம்பர் 2022 இன் படி தமிழகத்தின் வேலையின்மை விகிதம் 6.8 சதவிகிதமாகும். இது தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

தமிழகத்தின் நிதி அமைச்சர் கணக்குப்படி 5.5 லட்சத்திற்கும் மேல் அரசு பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக இருக்கிறது.

காலியாக. உள்ள பணியிடங்களை நிரப்ப. பல்வேறு தடைகளை ஒன்றிய அரசு உலக வர்த்தக நிறுவனத்தின் கட்டளைப்படி அனைத்து அரசுப்பணிகளையும், அவுட்சோர்சிங் முறையில் கையாளவேண்டும் என



மாநில அரசுகளுக்கு நிர்ப்பந்தம் கொடுக்கிறது. இதனை எதிர்க்காமல் மாநில அரசுகளும் துணைபோகின்றன.

இதன் காரணமாக தான் தமிழ்நாடு அரசு அரசாணை 115ஐ கொண்டு வந்து ஏற்கனவே 5 ஆண்டுகளுக்கு மேல் நிரப்பப்படாமல் உள்ள காலிப்பணியிடங்களை ரத்து செய்கிறது.

பாசிச சிந்தனை கொண்ட ஆர்எஸ்எஸ்சினால் வழி நடத்தக்கூடிய ஒன்றிய மோடி அரசின் நடவடிக்கைகள் வேலை வாய்ப்பை மேலும் மேலும் அழித்து வருகிறது.

இதனை உணர்ந்து அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் தொடர்ந்து வேலையின்மைக்கு எதிராக போராடிவருகிறது.

தமிழ்நாட்டில் எங்கே எனது வேலை? எனும் முழக்கத்துடன் முதலில் கையெழுத்து இயக்கமும் பின்னர் ஆர்ப்பாட்டம், முற்றுகைப் போராட்டங்களை இளைஞர் பெருமன்றம் நடத்தியது.

சோசலிச லட்சியத்திற்காகவும், இந்திய விடுதலைக்காகவும் தூக்கு மேடை ஏறிய மாவீரன் பகத்சிங் நினைவு நாளான மார்ச் 23 ந்தேதி சென்னை, ஒசூர், கன்னியாகுமரி, வேதாரண்யம் ஆகிய நான்கு முனைகளில் இருந்து பிரச்சாரப் பயணத்தை தொடங்கியது. எங்கே எனது வேலை?எனும் முழக்கத்துடன் 8 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி இளைஞர் எழுச்சி தொடர் பரப்புரை பயணம் தமிழ்நாட்டின் நகர்ப்புற பகுதிகளில் நடைப்பயணமாக மக்களை சந்தித்து ஏப்ரல் 2 தியாக செம்மல் பாலன் பிறந்தநாளில் திருச்சியில் சங்கமிக்கிறது. அங்கு இளைஞர் எழுச்சி மாநாடு நடைபெற இருக்கிறது. தொடர்பரப்புரை பயணத்திலும், இளைஞர் எழுச்சி மாநாட்டிலும் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் பங்கேற்கிறார்கள்.

வேலை பெறும் உரிமையை அடிப்படை உரிமையாக்க பகத்சிங் தேசிய வேலை உறுதியளிப்புச் சட்டத்தை(ஙி ழிணிநிகி) நிறைவேற்று!

வேலை கொடு அல்லது வேலை கொடுக்கிற வரை மாதம் 10 ஆயிரம் நிவாரணம் கொடு!

ஒன்றிய மற்றும் மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு மற்றும் ஆசிரியர் காலிப்பணியிடங்களை உடனே நிரப்பு!

புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவதோடு வேலை வாய்ப்புகளில் உள்ளூர் தொழிலாளர்களுக்கு முன்னுரிமை கொடு!

வேலை வாய்ப்புக்களில் ஒப்பந்த மற்றும் அவுட்சோர்சிங் முறையினை ரத்து செய்து, நிரந்தர பணியிடங்களாக மாற்றியமைத்திடு!

தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச மாத ஊதியமாக 21ஆயிரம் கிடைப்பதை உறுதிப்படுத்து!

வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து 45 வயதுக்குள் இறந்து விடுவோர் குடும்பத்திற்கு 25லட்சம் இழப்பீடு வழங்கு!

தனியார் துறையில் இடஒதுக்கீடு வழங்க சட்டம் நிறைவேற்று!

எங்கே எனது வேலை? என முழக்கம் எழுப்ப இருக்கிறார்கள். இம்முழக்கம் வேலை தேடும் இளைஞன் இல்லாத இந்தியாவை உருவாக்க வேண்டும் என கனவு கண்ட பகத்சிங் வாரிசுகளின் முழக்கம்.

பகத்சிங் லட்சியமான சோசலிச நனவாகும் வரை இம்முழக்கத்தை இளைஞர் பெருமன்றம் இதனை எழுப்பிக்கொண்டே இருக்கும்.

ஆகவே, அனைவரும் வேலையின்மைக்கு எதிராக அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் நடத்தும் இந்த பேரியக்கத்தில் இணைந்திடுவீர்.

தொடர்புக்கு: 97917 53865

# ஆர்.சி.எச்.தூய்மைப் பணியாளர்கள் உண்ணாநிலை அறப்போராட்டம்

பணி நிரந்தரம் கோரி, ஆ.சி.எச். தூய்மைப் பணியாளர்கள் மார்ச் 17 அன்று சென்னையில் கவன ஈர்ப்பு உண்ணாநிலை அறப்போராட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் 2005 ஆம் ஆண்டு முதல் ஸி.சி.பி. திட்டத்தின் கீழ், தற்காலிக அடிப்படையில் 3140 க்கும் மேற்பட்ட தூய்மைப் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

அவர்களுக்கு மாதம் தோறும் ரூ.500 என்ற குறைவான தொகையே தொகுப்பூதியமாக வழங்கப்பட்டது. பின், அது ரூ.1000 உயர்த்தி வழங்கப்பட்டது.

ஏழு ஆண்டுகளுக்கும் மேலாக பணிபுரிந்து வருபவர்களுக்கு ரூ.1500 என தற்பொழுது வழங்கப்பட்டு வருகிறது.

அவர்களில் கணிசமானோர் பத்து முதல் பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர்.

பலருக்கு தற்போது வழங்கப்படும் இக்குறைவான ரூ.1500 தொகுப்பூதியம் கூட, பல மாதங்களாக வழங்கப் படவில்லை என்பது வருந்தத்தக்கது.

அவர்கள் நாள்தோறும் தொடர்ந்து பனிரெண்டு மணி நேரம் வேலை செய்கின்றனர்.

வார விடுமுறை ,அரசு விடுமுறை மற்றும் மருத்துவ விடுப்பு கூட இல்லாமல், அவர்கள் பணி செய்ய வைக்கப் படுகின்றனர்.

இவர்களில் பெரும்பாலானோர், பட்டியலின சாதிகளைச் சேர்ந்தவர்கள் என்பதும், பெண்கள் என்பதும், பொருளாதார ரீதியில் வறுமைக் கோட்டிற்கும் கீழ் உள்ளவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர்களின் தொகுப்பூதியம், “குறைந்த பட்ச ஊதிய நிர்ணய சட்டத்திற்கே” எதிராக உள்ளது.

இவர்களுக்கு ஊதிய உயர்வு, பணிநிரந்தரம், 8 மணி நேர வேலை, வார




விடுமுறை, அரசு விடுமுறை நாட்களில் விடுமுறை, இலவச சீருடை, இலவசப் பேருந்து பயண அடையாள அட்டை வழங்கிட வேண்டும்.

வருகைப் பதிவேட்டில் கையெழுத்திட அனுமதிக்க வேண்டும் என்பன போன்ற நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தி தொடர்ந்து போராடி வருகின்றனர்.

**கோரிக்கைகள்**

பத்து, பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக ஒப்பந்த அடிப்படையில், மாதந்தோறும் 1500 ரூபாய் தொகுப்பூதியத்தைப் பெற்றுக் கொண்டு பணிபுரியும் இவர்களுக்கு தகுந்த ஊதிய உயர்வு, பணி பாதுகாப்பு, பணிநிரந்தரம் உள்ளிட்டவற்றை வழங்கிட வேண்டும்.

சில ஆரம்ப சுகாதார நிலையங்களில் வாய்மொழி உத்தரவின் மூலம் இப்பணியாளர்கள் இனிமேல் பணிக்கு வரவேண்டாம் என வலியுறுத்தப்படுகின்றனர்.

இது மிகுந்த வருத்தத்தை தருகிறது. உடனடியாக பணிநீக்க நடவடிக்கைகளை ரத்து செய்யவேண்டும்.

நாள் தோறும் 12.00 மணி நேர வேலை என்பதை ரத்து செய்து, எட்டு மணி நேரம் மட்டுமே வேலை என்பதை நடைமுறைப் படுத்த வேண்டும்.

அவர்களுக்கு வார விடுமுறை, மற்றும் அரசு விடுமுறை நாட்களில் விடுமுறை ஆகியவற்றை உடனே வழங்கிட வேண்டும்.

மருத்துவ விடுப்பு உள்ளிட்ட விடுப்புகளை உடனே வழங்கிட வேண்டும்.

இலவச சீருடை, இலவச பேருந்து பயண அடையாள அட்டை வழங்கிட வேண்டும்.

வருகைப் பதிவேட்டில் கையெழுத்திட அனுமதிக்க வேண்டும்.

அவர்களின் கௌரவமும், சுயமரியாதையும் காக்கப்பட வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி மார்ச் 17 அன்று சென்னை எழும்பூர், ருக்மணி லட்சுமிபதி சாலையில் உள்ள ராஜரத்தினம் ஸ்டேடியம் எதிரில் உண்ணா நிலை அறப்போராட்டம் நடைபெற்றது.

இப் போராட்டத்திற்கு தமிழ்நாடு அரசு ஆரம்ப சுகாதார நிலைய ஆ.சி.எச். ஒப்பந்த சுகாதார துப்புரவுப் பணியாளர்கள் நலச் சங்கத்தின், மாநிலத் தலைவர்என். எஸ்.செல்வராஜ் தலைமை தாங்கினார்.

எஸ்.ராஜலட்சுமி, ஆர்.சாரதா, ஆர்.தாட்சாயிணி, எஸ்.லோகநாயகி முன்னிலை வகித்தனர். எஸ்.விஜயா வரவேற்புரையாற்றினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் தொடக்க உரையாற்றினார்.

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச்செயலாளர் டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத், தமிழ்நாடு அரசு ஆரம்ப சுகாதார நிலைய ஆர்.சி.எச். ஒப்பந்த சுகாதார துப்புரவு பணியாளர்கள் நலச்சங்கத்தின், பொதுச் செயலாளர், மகப்பேறு மருத்துவ நிபுணர், டாக்டர் ஏ.ஆர்.சாந்தி ஆகியோர் கோரிக்கைகளை விளக்கி உரையாற்றினர்.

ஏஐடியூசி மாநில பொதுச் செயலாளர் எம். இராதாகிருஷ்ணன், ஆம் ஆத்மி கட்சியின் தலைவர் எஸ்.ஏ.என். வசீகரன், மே 17 இயக்கத்தின் தலைவர் திருமுருகன் காந்தி, தமிழ்நாடு மருத்துவத்துறை பணியாளர்கள் கூட்டமைப்பின் தலைவர் பி.காளிதாசன் , அரசு அனைத்து டாக்டர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் டாக்டர் சி.சுந்தரேசன், பாரா மெடிக்கல் கல்வி மற்றும் நலச்சங்கத்தின் மாநில துணைத் தலைவர், எஸ்.தனவந்தன், அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாநில தலைவர் சி.தினேஷ், மாநில பொதுச் செயலாளர் தினேஷ் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர்.

மூத்த தொழிற்சங்கத் தலைவர் ஆர்.கிருஷ்ணமூர்த்தி, உண்ணாநிலை போராட்டத்தை முடித்துவைத்து நிறைவு உரையாற்றினார்.

இந்த உண்ணாநிலை அறப்போராட்டத்தில் 350 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். கொட்டும் மழையிலும் உண்ணாநிலை போராட்டம் நடைபெற்றது.



# சங்கே முழங்கு!

அரசு கலைக் கல்லூரியில் மிகக் குறைந்த ஊதியத்தில் பணிபுரியும்

## பேராசிரியர்களின் ஊதியத்தை உயர்த்துக!

தமிழ்நாடு முழுவதும் இயங்கும் அனைத்து அரசு கலைக் கல்லூரிகளில் போதிய பேராசிரியர்கள் இல்லாததால், மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு காலியாக உள்ள பணியிடங்களை தேர்வு மூலம் பேராசிரியர்களை தேர்ந்தெடுக்க அரசு உத்தரவிட்டுள்ளது. இந்நிலையில் பேராசிரியர்களுக்காக நடத்தப்படும் தேர்வு காலதாமதம் ஏற்படுவதால் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலம் பேராசிரியர்களை நியமித்து, மாணவர்களுக்கான தடையில்லா கல்வியை வழங்குவதற்கு அந்தந்த கல்லூரி முதல்வர்களுக்கு அரசு அறிக்கை அனுப்பி அதன்படி காலி பணியிடங்களில் தகுதியின் அடிப்படையில் பேராசிரியர்கள் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

இவ்வாறு நியமனம் செய்யப்பட்ட பேராசிரியர்கள் மாதம் ரூ.5 ஆயிரம் முதல் ரூ.10 ஆயிரம் வரை குறைந்த ஊதியத்தைப் பெற்று கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாக குடும்பத்தை நடத்துவதில் மிகுந்த சிரமப்படுவதாக தெரிவிக்கின்றனர். அரசு பள்ளியில் பணி புரிகின்ற பெற்றோர் ஆசிரியர் கழக ஆசிரியர்களுக்கு மாதம் ரூ.15 ஆயிரம் அரசு வழங்கும்போது அரசு கல்லூரியில் பணிபுரிகின்ற பெற்றோர் ஆசிரியர் கழக பேராசிரியர்களுக்கு மாதம் ரூ.5 ஆயிரம் முதல் ரூ.10 ஆயிரம் வழங்கி பாரபட்சம் காட்டுவது வேதனையளிக்கிறது. கல்வித் தகுதியை ஒப்பிட்டு இக்காலக் கட்டத்தில் பொருளாதார விலைவாசியை கருத்தில் கொள்ள வேண்டும்.

மேலும்ஒருசிலகல்லூரிகளில்முதல்வர்களின் மனநிலைக்கு ஏற்றவாறு ஊதியங்கள் குறைத்து தரப்படுகிறது. குறைந்த ஊதியத்தை கொண்டு அரசு கல்லூரிகளில் பணிபுரியும் பெற்றோர் ஆசிரியர் கழக பேராசிரியர்களின் வாழ்வாதாரம் பாதிப்படைந்து நிலையற்ற ஊதிய நிலையினால் நிலை குலைந்து உள்ளனர். ஆகவே தமிழக அரசு பெற்றோர் ஆசிரியர் கழக பேராசிரியர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு நிலையான ஊதிய முறையை வரன்முறைப்படுத்தி ஊதியத்தை உயர்த்தி வழங்கிட தமிழ்நாடு அரசு முன்வர வேண்டும் என அரசு கலைக் கல்லூரிகளில் பணி புரியும் பெற்றோர் ஆசிரியர் கழக பேராசிரியர்கள் எதிர்பார்க்கின்றனர்.

– கபில்தேவ்குமார்

## முக்கிய அறிவிப்பு

ஜனசக்திக்கு கட்டுரை எழுதுவோர் படம் உள்ளிட்டு முக்கால் பக்கத்திற்குள் எழுத வேண்டுகிறோம், டைப்பிங் செய்து word fileலில் unicode fontல் அனுப்பவும்.

ஜனசக்தி உள்ளடக்கம் சம்பந்தமாகத்
தொடர்பு கொள்ள வேண்டிய கைபேசி:
**டி.எம்.மூர்த்தி - 9444360869,**
**த.லெனின் - 94444 81703**

இயக்கச் செய்திகள் சம்பந்தமாகத்
தொடர்பு கொள்ள வேண்டிய கைபேசி:
**ஜெ.முருகேசன் - 78456 93142**

ஜனசக்தி விநியோகம் சம்பந்தமாக
தொடர்பு கொள்ள வேண்டிய கைபேசி:
**கே.கணேசன் - 9444331138**

ஜனசக்தி வரவு கணக்குச் சம்பந்தமாகத்
தொடர்பு கொள்ள வேண்டிய கைபேசி:
**இளசை கணேசன் 8220468816**

ஆசிரியர் குழு, ஜனசக்தி

# மகிழ்ச்சி அளிக்கும் வேளாண்மை நிதிநிலை அறிக்கை

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பாராட்டு

தமிழ்நாடு அரசின் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் திரு எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தமிழ்நாடு சட்டமன்றத்தில் 2023 24 ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

வேளாண்மை நிதிநிலை அறிக்கை தயாரிக்கும் முன்பு தமிழ்நாடு முழுவதும் விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள், முன்னோடி விவசாயிகள், வேளாண்துறை வல்லுநர்களின் கருத்துக்களை அமைச்சர் நேரடியாக கேட்டறிந்ததும், கருத்துக் கேட்புக் கூட்டங்களில் வந்த கருத்துக்களை பிரதிபலிக்கும் வகையில் நிதிநிலை அறிக்கை அமைந்திருப்பது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது.

தமிழ்நாட்டில் இயங்கி வரும் நூற்பாலைகளுக்கு தேவையான பருத்தியை இந்த மாநிலத்திலேயே உற்பத்தி செய்ய ஊக்குவிப்பு திட்டம், முக்கிய வேளாண் பொருள்களுக்கு புவிசார் குறியீடு பெறுவது, தக்காளி, வெங்காயம் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் தட்டுபாடின்றி எல்லாக் காலங்களிலும் சீராக கிடைக்கச் செய்வது, அதிகமாக விளையும் பயிர்களை கருத்தில் கொண்டு, அவைகளை மதிப்புக் கூட்டி மேம்படுத்தும் தொழில்களை தொடங்குவது, விவசாயிகளுக்கு ஆலோசனை கூற வட்டாரத்துக்கு ஒரு விஞ்ஞானி நியமனம் செய்வது என்று பல நல்ல திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

கரும்பு, நெல் போன்ற வேளாண் உற்பத்திப் பொருட்களுக்கு ஊக்குவிப்புத் தொகை அறிவிக்கப்பட்டுள்ளது. நெல்லுக்கு அறிவித்துள்ள ஊக்கத் தொகை மேலும் அதிகரிக்க வேண்டும். விவசாய கிணறுகளுக்கான மின் இணைப்பு, மும்முனை மின்சாரம் வழங்கல், நீர்வளத்துறை மேம்பாடு, அங்கக வேளாண்மை ஊக்குவிக்க "நம்மாழ்வார் விருது", பயிர் கடன் வழங்க நிதி, வட்டியில்லா கடன் வழங்கும் திட்டம், பத்து லட்சம் குடும்பங்களுக்கு மரக்கன்றுகள் வழங்குவதன் மூலம் காலநிலை சீரமைப்புக்கு உதவுவது என அனைத்துத் தரப்பினரும் மகிழ்ந்து வரவேற்கும் நிதிநிலை அறிக்கை வழங்கிய தமிழ்நாடு அரசுக்கும், வேளாண்மை உழவர் நலன் மேம்பாட்டு துறை அமைச்சருக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## மாநிலக்குழு கூட்டத்தில் கட்சி வளர்ச்சி நிதி வழங்கிய தோழர்கள்

| | | |
|---|---|---|
| வஹிதா நிஜாம் | – | ரூ.2,00,000 |
| வை.சிவபுண்ணியம் | – | ரூ.50,000 |
| திருப்பூர் எம்.ரவி | – | ரூ.50,000 |
| எம்.செல்வராசு எம்.பி. | – | ரூ.25,000 |
| கே.சுப்பராயன் எம்.பி. | – | ரூ.10,000 |
| தி.ராமசாமி | – | ரூ.10,000 |
| எம்.ஆறுமுகம் | – | ரூ.10000 |
| பொ.லிங்கம் | – | ரூ.10000 |
| க.மாரிமுத்து எம்.எல்.ஏ. | – | ரூ.10000 |
| நா.பெரியசாமி | – | ரூ.5000 |
| டி.எம்.மூர்த்தி | – | ரூ.5000 |
| பி.பத்மாவதி | – | ரூ.5000 |
| எம்.ராதாகிருஷ்ணன் | – | ரூ.5000 |
| பி.எஸ்.மாசிலாமணி | – | ரூ.5000 |
| வை.செல்வராஜ் | – | ரூ.5000 |
| டாக்டர் ரவீந்திரநாத் | – | ரூ.5000 |
| எம்.இலகுமையா | – | ரூ.5000 |
| செங்கோடன் (புதுக்கோட்டை) | – | ரூ.3000 |
| கண்ணகி | – | ரூ.2000 |
| முத்து உத்திராபதி | – | ரூ.2000 |
| ஆ.மோகன் (சேலம்) | – | ரூ.2000 |
| பி.துரை கடலூர் | – | ரூ.2000 |
| மோகன் குமார் | – | ரூ.2000 |
| இரா.முத்தரசன் | – | ரூ.1000 |
| க.சந்தானம் | – | ரூ.1000 |
| கோ.பழனிச்சாமி | – | ரூ.1000 |
| க.பாரதி (ஏ.ஐ.ஒய்.எப்.) | – | ரூ.1000 |
| சேலம் எம்.ராமன் | – | ரூ.1000 |
| எஸ்.பி.ஞானசேகரன் | – | ரூ.1000 |
| ரஞ்சனி கண்ணம்மா | – | ரூ.1000 |
| திண்டுக்கல் மணிகண்டன் | – | ரூ.500 |
| நெல்லை லட்சுமணன் | – | ரூ.500 |

# ஆலை விபத்துக்களை தவிர்க்க உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

காஞ்சிபுரம் மாவட்டம், குருவிமலை அருகே உள்ள வளத்தோட்டப் பகுதியில் இயங்கி வந்த பட்டாசு ஆலையில் ஏற்பட்ட விபத்தில்9பேர்மரணமடைந்துள்ளனர். 18 பேர் படுகாயமடைந்து, உயிருக்கு ஆபத்தான நிலையில் பல மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பட்டாசு ஆலைகளில் ஏற்படும் விபத்துக்களை தடுப்பதில் தொழிற்சாலை ஆய்வு மிக முக்கியத்துவம் வாய்ந்தது. ஆனால், அரசின் இந்தப் பிரிவு செயலற்ற நிலையில் இருப்பதே தொடர் விபத்துக்களுக்கு காரணமாகும்.

விபத்துக்கு வாய்ப்புள்ள ஆபத்தான தொழில்களில் தொழில் கட்டமைப்பு, விபத்துத் தடுப்பு சாதனங்கள், பயிற்சி பெற்ற திறன் கொண்ட தொழிலாளர்கள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

பட்டாசு ஆலை உரிமையாளர் லாபம் பார்க்கும் சுயநலமும், ஊழலுக்கு இரையாகும் தொழிற்சாலை ஆய்வு அலுவலர்களும் மனித உயிர்கள் பலியாவதற்கு பொறுப்பேற்க செய்ய வேண்டும். இதற்கு தகுந்த பாதுகாப்பு விதிமுறைகள் உருவாக்கப்பட்டு சட்டமும் மேம்படுத்தப்பட வேண்டும்.

தற்போது பட்டாசு ஆலை விபத்தில் பலியானோர் குடும்பங்களுக்கு, உதவியும் மறுவாழ்வு ஏற்பாடுகளும் செய்து தர வேண்டும். படுகாயம் அடைந்தவர்களை காப்பற்ற உயர் சிகிச்சை கிடைப்பதை உறுதி செய்யவும் தமிழ்நாடு அரசு நடவடிக்கை மேற்கொள்வதுடன் பாதுகாப்பு குறைபாடுகளுக்கு காரணமானவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

எங்கே எனது வேலை? "இளைஞர் எழுச்சி பரப்புரை மாநாடு"

# அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் பிரசுரம் வெளியீட்டு விழா!




அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் சார்பில் மாவீரன் பகத்சிங் நினைவு நாளான மார்ச் 23 முதல், தியாகச் செம்மல் கே.பாலதண்டாயுதம் பிறந்த நாளான ஏப்ரல் 2 வரை தமிழ்நாடு முழுவதும் நான்கு குழுக்களாக "இளைஞர் எழுச்சி தொடர் பரப்புரை பயணம்" மேற்கொண்டு, ஏப்ரல் 2ல் திருச்சியில் சங்கமித்து நடைபெறும் இளைஞர் எழுச்சி மாநாட்டின் நோக்கங்களை/கோரிக்கைகளை விளக்கி, இளைஞர் பெருமன்றம் சார்பில் தயாரிக்கப்பட்ட "எங்கே எனது வேலை?" என்ற பிரசுர வெளியீட்டு விழா மார்ச் 18 அன்று சென்னை பாலன் இல்லத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் தலைமையில் நடைபெற்றது.

கட்சியின் தேசியச் செயலாளர் டாக்டர் கே.நாராயணா வெளியிட, அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற முன்னாள் மாநிலச் செயலாளர் கே.சுப்பராயன் எம்.பி. பெற்றுக் கொண்டார்.

கட்சியின் மாநில துணைச் செயலாளர் நா.பெரியசாமி, தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர் டி.எம்.மூர்த்தி, இளைஞர் பெருமன்ற மாநிலத் தலைவர் த.கு.வெங்கடேஷ், மாநிலச் செயலாளர் க.பாரதி, மாணவர் பெருமன்ற மாநிலத் தலைவர் சீ.தினேஷ், மாநிலச் செயலாளர் பா.தினேஷ் மற்றும் நிர்வாகிகள் கலை அஸ்வினி, ஏ.ரஞ்சனி கண்ணம்மா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## சாதியின் பெயரை தனது பெயரோடு சேர்த்துக் கொள்வது வர்ணாஸ்ரமத்தின் குரல்!

சாதியின் பெயரை தனது பெயரோடு சேர்த்துக் கொள்வதில் என்ன தவறு?

தமிழ்நாட்டில் இப்படி ஒருவர் ஒன்றும் அறியாத அப்பாவிபோல் கேட்கிறார்!

இது, வர்ணாஸ்ரமத்தின்குரல்! அதாவது மனிதனை சாதி அடிப்படையில் குலத் தொழில் செய்வதை சட்டரீதியாகவும், நிரந்தரமாகவும் உறுதிபடுத்திட முயலும் முயற்சியின் ஆபத்தான தொடக்கம்!

சனாதன அதர்மத்தின் வஞ்சகக் குரலாகும்!

சாதிப் பெயரை தன் பெயருடன் ஒட்டவைப்பதற்கு, தமிழ்நாட்டில் வெட்கப்பட வைத்தவர் தந்தைபெரியார்!

தனது சொத்து முழுவதையும், கடைசி மூச்சு நிற்கிற வரை தனது உழைப்பு முழுவதையும் சாதி ஒழிப்பு, சமதர்மம், கடவுள்மறுப்பு, சமூக நீதி, பகுத்தறிவு, பெண்விடுதலை என, சமூகத்தை விழிப்பூட்டவே அர்ப்பணித்துமடிந்த மகாபுருஷன் தந்தைபெரியார்!

அவர் சேமித்து வைத்த சிந்தனைச் சொத்திற்கு தீவைக்கிற வேலை அல்லவா இது!

பெரியாரை இழிவுபடுத்துவது திராவிட, தமிழன் என்று பகைமூட்டி மோதவிடுவது என, புதுப்புதுபித்தலாட்ட அவதாரம் எடுத்துவருவது சனாதன பிரித்தாளும் தந்திரமே!

இந்தக்குரலுக்குப் பின்னால் ஒளிந்து நிற்பது ஆர்எஸ்எஸ் தான்!



## நாடளுமன்றத்தை பாஜக ஏன் முடக்கியது?

தப்பிக்க முடியாதவாறு சிக்கிக்கொண்ட மோடியின் ஆருயிர் நண்பர், அதானியை காப்பாற்றிக் கரை ஏற்றுவதற்காக முடக்கினர்!

எதிர்க்கட்சிகளை நாடாளுமன்றத்தில் வாய்திறக்க அனுமதித்தால், அதானிக்காக மோடி அரசு செய்த முறைகேடுகள் அம்பலப்படும் என்பதால், நாடாளுமன்றத்தையே காட்டுக் கூச்சல் எழுப்பி முடக்கினர்!

இத்தகைய அரசியல் சட்டவிரோதிகள், ஜனநாயக விரோதிகள் தொர்ந்து நாடாள அனுமதிக்கலாமா?

சிந்திப்பீர், செயலாற்றுவீர்!

## மாற்றம் வந்தே தீரும் இந்திய மக்கள் நரசிங்க அவதாரம் எடுப்பார்கள்

இந்திய நாட்டை, வகுப்புவாத வெறிபிடித்த பெருங்கரையான் அரித்து அழித்துக்கொண்டிருக்கிறது!

பொய்யும், புரட்டும், பித்தலாட்ட அரசியலையும் தவிர வேறு ஒன்றையும் தெரியாத ஒருவர் பிரதமராகிவிட்டார்!

மாமனிதர் நேருப்பெருமகன் அமர்ந்த இடத்தில்....அய்யகோ.... நினைக்கவே நெஞ்சு குமுறுகிறது!

எவ்வளவு பெரிய விபத்து, விபரீதம் தேசிய வாழ்வில் ஏற்பட்டு விட்டது!

நீதி, நிர்வாகம், பாதுகாப்பு உட்பட அனைத்துத் துறைகளிலும் நீக்கமற ஆர்.எஸ்.எஸ். ஊடுருவிக் கிடக்கிறது!

இந்த ஊடுருவல், 1977 ல் ஒன்றிய அமைச்சரவையில்ஆர்.எஸ்.எஸ். பங்குபெற்றது முதல் இன்றுவரை நீடித்து வருகிறது!

எல்லாத் துறைகளிலும் சொல்லிலும், செயலிலும், சிந்தனையிலும் விசம் பாய்ச்சப்பட்டு விட்டது!

இராமனின் அம்பு பட்டு மரணமடைகிறபோது, “இலட்சுமனா, சீதா” என்று இராமன் குரலில் மாரீசன் அபயக்குரல் எழுப்பி ஏமாற்றியதுபோல், பா.ஜ.க. இந்தியர்களை திட்டமிட்டே இராமன் பெயரால் ஏமாற்றி வருகிறது!

காலம் இப்படியே போகாது! மாற்றம் வந்தே தீரும்!

இந்திய மக்கள் நரசிங்க அவதாரம் எடுத்து பா.ஜ.க.வின் குடலை உருவி மாலை போட்டபடி ஆனந்தத் தாண்டவம் புரிந்தே தீருவார்கள்! பொறுத்திருங்கள்!

– கே.சுப்பராயன் எம்.பி. முகநூல் பதிவுகளில் இருந்து...

## கட்டிடத் தொழிலாளி மீது அரசுக்கு கவனமில்லை

### தமிழ்நாடு ஏஐடியூசி கட்டிடத் தொழிலாளர் சங்க மாநிலக்குழு தீர்மானம்

தமிழ்நாடு ஏஐடியூசி கட்டிட தொழிலாளர் சங்கத்தின் மாநில நிர்வாக குழு கூட்டம் திருச்சியில் மாநிலத் தலைவர் கே.இரவி தலைமையில் நடைபெற்றது. அதில் தமிழக பட்ஜெட் ஏமாற்றம் அளிப்பதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக மாநில பொதுச் செயலாளர் என்.செல்வராஜ்தெரிவித்ததாவது, இந்த பட்ஜெட்டில் கட்டிட தொழிலாளர்களின் நீண்ட நாள் கோரிக்கைகள் குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இது கட்டுமான தொழிலாளர்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளித்துள்ளது.

கட்டுமான தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதியும், விபத்து சிகிச்சையும், சிகிச்சைக்கான பாதுகாப்பும், வேலையில்லா காலத்திற்கு நிவாரணமும் வழங்கப்பட வேண்டும்.

1994 ஆம் ஆண்டு நலவாரியம் தொடங்கப்பட்டபோது இ.எஸ்.ஐ. மற்றும் பிராவிடண்ட்பண்ட்திட்டங்கள்அமல்படுத்துதல் வாரியத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக அறிவிக்கப்பட்டது. ஆனால் அது இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

பெண் தொழிலாளர்கள் 60 வயதை எட்டுவதற்கு முன்பாகவே மிகவும் தளர்ந்து விடுகிறார்கள். எனவே, அவர்கள் ஓய்வு பெறும் வயதை 50 என அறிவிக்க வேண்டும்.

60 வயது நிறைவடைந்த கட்டுமான தொழிலாளிக்கு மாதம் ரூபாய் 1000 மட்டுமே ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. முதுமை காலத்தில் மருத்துவ செலவிற்கே இது போதுமானதாக இருக்காது. எனவே, ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்க வேண்டும்.

அரசுத் துறையில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களுக்கு பிரசவகால விடுப்பு ஆறு மாத காலம் சம்பளத்துடன் வழங்கப்படுவது போல, கட்டுமான தொழிலில் உள்ள பெண் தொழிலாளர்களுக்கு மகப்பேறு கால விடுப்பு ஆறு மாத காலத்திற்கு சம்பளத்துடன் வழங்க வேண்டும். இந்த நிவாரணம் மாத சம்பளம் ரூ.15,000 என கணக்கிட்டு வழங்கப்பட வேண்டும்.



கட்டுமான தொழிலாளர்கள் பண பலன்களுக்காக விண்ணப்பிக்கும் போது, அதிகாரிகள் தேவையற்ற பல்வேறு காரணங்களை கூறி விண்ணப்பங்களை நிராகரிக்கக் கூடாது. என்பன உள்ளிட்ட கட்டுமான தொழிலாளர்களின் கோரிக்கை நீண்ட காலமாக முன்வைக்கப்பட்டு போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. கடந்த எட்டாம் தேதி தமிழக முழுவதும் கிராம நிர்வாக அலுவலர்கள் மூலமாக மாநில முதல்வருக்கு கோரிக்கை மனுக்கள் கொடுக்கப்பட்டுள்ளது. இவை சம்பந்தமாக பட்ஜெட்டில் எதுவும் தெரிவிக்கப்படாதது மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது. என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் தமிழ்நாடு ஏ.ஐ.டி.யூ.சி. யின் பொதுச் செயலாளர் எம். ராதாகிருஷ்ணன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

கட்டிட தொழிலாளர் சங்கத்தின் மாநில துணை பொது செயலாளர் சேலம் முனுசாமி, மாநில செயலாளர்கள் அம்பத்தூர் ஆர்.துரைசாமி, ஈரோடு எஸ்.சின்னசாமி, தூத்துக்குடி சேது, திண்டுக்கல் பாண்டியன், கோயமுத்தூர் சி.நந்தினி, மாநில துணைத்தலைவர்கள் கோயமுத்தூர் ஆர்.பாலகிருஷ்ணன், கரூர் வடிவேல், வேலூர் சங்கர் மேஸ்திரி, திருச்சி மாமன்ற உறுப்பினர் சுரேஷ், மாநில பொருளாளர் இரா.முருகன் மற்றும் மாவட்ட செயலாளர்கள் கலந்து கொண்டார்கள்.

## ராமகிருஷ்ண பாண்டாவின் தாயார் மறைவு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய குழு செயலாளர் ராமகிருஷ்ண பாண்டாவின் தாயார் ஹேமலதா பாண்டாவின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு அதன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

மார்ச் 17 அன்று இரவு சுமார் 10:35 மணிக்கு புவனேஸ்வரில் உள்ள கேபிடல் மருத்துவமனையில் ஹேமலதா பாண்டா இயற்கை எய்தினார். 82 வயதான அவர் கடந்த 22 நாட்களாக கேபிடல் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு இருந்தார்.

அன்னாரது குடும்ப உறுப்பினர்களுக்கும், மாநில குழுவிற்கும் கட்சி அதன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது. மறைவு செய்தியை அறிந்தவுடன், கட்சியின் பொதுச் செயலாளர் டி ராஜா ராமகிருஷ்ண பாண்டாவைத் தொடர்பு கொண்டு அவரிடம் இரங்கல் தெரிவித்தார்.

## தொழிலாளர் நலன் சார்ந்த விஷயங்கள் முக்கியத்துவம் பெறவில்லை

### தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் தொழிலாளர் சம்மேளனம் அறிக்கை

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் தொழிலாளர் சம்மேளன (ஏஐடியுசி) பொதுச் செயலாளர் ஆர்.ஆறுமுகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

அரசு போக்குவரத்து கழகங்களுக்கு வரவு செலவு பற்றாக்குறையை ஈடு செய்யும் அளவில் நிதி ஒதுக்கீடு தேவை எனத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். அருகில் உள்ள மாநிலங்களில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. தற்போது ஒதுக்கப்பட்டுள்ள நிதி எரிபொருள் மானியம், மற்றும் அரசின் சமூக நலத் திட்டங்களை செயல்படுத்துவதற்கு உரிய தொகைகள் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளன. புதிய பேருந்துகள் வாங்குவதற்கும், பழைய பேருந்துகளை சீரமைத்திடவும் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ரூபாய் 500 கோடி மிகவும் குறைவானதாகும். 7000க்கும் மேற்பட்ட வயதான பேருந்துகள் உள்ளன.

மெட்ரோரயில்போன்றதிட்டங்களுக்குரூ பத்தாயிரம் கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நிகழ்கால தேவை நிறைவு செய்வதை விட்டுவிட்டு எதிர்கால தேவைக்கு திட்டமிடுவது நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள உடனடி தேவையை நிறைவு செய்யும் பொருளாதார வளர்ச்சிக்கு உதவாது என கருதுகிறோம்.

வியாசர்பாடி,வடபழனி, திருவான்மியூர் பணிமனைகள் மட்டுமல்ல தமிழகம் முழுவதும் உள்ள 350 பணிமனைகளில் 100 க்கும் மேற்பட்ட பணிமனைகளில் தரைதள வசதி, பேருந்து பராமரிப்பு மற்றும் அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் உள்ளன. பழுதடைந்த நிலையில் உள்ள ஓய்வறை கட்டிடங்கள் உள்ளன. அவைகளும் மேம்படுத்தப்பட வேண்டும். இக்கோரிக்கை அரசுடன் நடைபெறுகின்ற பேச்சு வார்த்தையின் போது தொழிற்சங்கங்கள் தொடர்ந்து பல ஆண்டுகளாக வலியுறுத்தப்பட்டு வந்துள்ளனர். ஒப்பந்த பிரிவுகளில் பணிமனைகளில் அடிப்படை வசதி மேம்படுத்தப்படும் என உறுதி அளிக்கப்பட்டுள்ளது. இவைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும்.

தொழிலாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும் தொகைகள் ஆயுள் காப்பீடு, சிக்கன நாணய சங்கம், ஓய்வு கால பண பலன்கள் உள்ளிட்ட இனங்களுக்கு செலுத்தப்படவில்லை. தொழிலாளர்களின் பணம் ரூபாய் 10 ஆயிரம் கோடி அளவிற்கு அரசு போக்குவரத்து கழகங்கள் நடப்புச் செலவிற்காக பயன்படுத்தி வருகின்றன. இதனை மீட்டெடுப்பதற்கான எவ்வித உத்தரவாதமும் இல்லை. போக்குவரத்து கழகங்களின் நிதி நெருக்கடி சுமையினை தொழிலாளர்கள் மீது சுமத்தப்படுகிறது. இது நியாயம் அல்ல.

தொழிலாளர்களுக்கு சேர வேண்டிய பண பலன்கள் அவர்களுக்கு கிடைப்பதற்கு உரிய நடவடிக்கை உடனடி தேவையாக கருதுகிறோம். அரசு போக்குவரத்து கழகங்களை பாதுகாத்திட தேவையான நிதி ஒதுக்கிட வேண்டும் என ஏஐடியுசி சார்பாக வலியுறுத்துகின்றோம்.

இவ்வாறு ஆர். ஆறுமுகம் தெரிவித்துள்ளார்.

## மின்கட்டண உயர்வை திரும்பப் பெறாதது ஏமாற்றம் அளிக்கிறது

### தமிழ்நாடு கைத்தொழில், குறுந்தொழில் முனைவோர்கள் சங்கம் அறிக்கை

தமிழ்நாடு கைத்தொழில் மற்றும் குறுந்தொழில் முனைவோர்கள் சங்க கோவை மாவட்டத் தலைவர் ஜே.ஜேம்ஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

2023 – 2024 க்கான தமிழக பட்ஜெட்டில் அறிவித்த கோவைக்கான மெட்ரோ திட்டத்துக்கான ரூ.9000 கோடி மற்றும் செம்மொழி பூங்காவுக்கான ரூ.172 கோடி ஒதுக்கீடும், பெண் தொழில் முனைவோர்களை ஊக்கப்படுத்த தனி திட்டம் அறிவிப்பும், எழில் மிகும் கோவை திட்ட அறிவிப்பும், குறு சிறு தொழில் வளர்ச்சிக்கான ரூ.1509 கோடி நிதி ஒதுக்கீடு புலம் பெயர்ந்த தொழிலாளிகளுக்கு நேரடி மருத்துவ உதவி, பாலிடெக்னிக்கில் பயிலும் மாணவர்களுக்கு தொழில் சாலையில் பயிற்சி போன்ற அறிவிப்புகளும் நிதி ஒதுக்கீடுகளையும் வரவேற்கிறோம்.

கோவையில் குறுந்தொழில் பேட்டை அறிவிப்பு இல்லாதது, மின்கட்டணத்தில் உயர்த்திய கிலோ வாட்டுக்கான கட்டணத்தை திரும்பப்பெற அறிவிப்பு இல்லாதது ஏமாற்றம் அளிக்கிறது. இந்த பட்ஜெட் கூட்ட தொடரில் மேற்கண்ட கோரிக்கைகளை பரிசீலித்து குறுந்தொழில் பேட்டை அறிவிப்பும், உயர்த்திய கிலோவாட்டுக்கான கட்டண உயர்வையும் திரும்பபெற வேண்டுகிறோம்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

## வேளாண் சட்ட நகல் எரிப்பு போராட்ட வழக்கிலிருந்து விடுதலை



மோடி அரசின் மோசமான மூன்று வேளாண் சட்டங்களை திரும்பப் பெற வலியுறுத்தி வேளாண் சட்ட நகல்களை எரிக்கும் போராட்டம் தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் நடைபெற்றது. இந்த வழக்கில் லெனின் குமார் தமிழ்நாடு விவசாய சங்கத்தின் மாநில குழு உறுப்பினர், வெ.கிருஷ்ணமூர்த்தி தமிழ்நாடு விவசாய சங்கத்தின் மாவட்ட செயலாளர், வ. பாலமுருகன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர், முரளிதரன் பெருமாள் பட்டி ஊராட்சி மன்ற தலைவர், மிக்கேல் லிங்கம்பட்டி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், தங்கச்சாமி திமுக மாவட்ட பிரதிநிதி ஆகிய ஆறு கைது செய்யப்பட்டு, வழக்கு எண், எஸ்.டி.சி. 2166/ 2021 கோவில்பட்டி நீதிமன்றத்தில் நடைபெற்றது. இவர்கள் அனைவரும் தற்போது விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

எந்தவித கட்டணமும் இன்றி திறம்பட வாதாடி வெற்றி கொண்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கோலால் பட்டி நகர துணைச்செயலாளர் முனியசாமி மகள் வழக்கறிஞர் எம்.முனீஸ்வரி என்ற சாந்திக்கும், வழக்கறிஞர்கள் சந்தனசேகர், முத்துக்குமார் ஆகியோருக்கும் போராட்டக் குழுவின் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

## மாப்பிள்ளையூரணி ஊராட்சியை தூத்துக்குடி மாநகராட்சியுடன் இணைத்திடுக!

தூத்துக்குடி மாநகரம் தாளமுத்துநகர், துப்பாஸ்பட்டி ஆகிய கிளைகளின் கூட்டுக்கூட்டம் அழகுவேல் தலைமையில் நடைபெற்றது. மாநிலக்குழு உறுப்பினர் எஸ்.பி.ஞானசேகர், ப.மாணிக்கம் நூற்றாண்டு மலரை வெளியிட, கிளைச் செயலாளர் ஐ.அந்தோணி சௌந்தரராஜன் மற்றும் அழகுவேல் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

நூற்றாண்டு மலரை பெ.கணபதி சுப்பிரமணியன் அறிமுகப்படுத்தி உரையாற்றினார்.

தூத்துக்குடி மாநகராட்சி துவங்கப்பட்ட காலத்தில் மாப்பிள்ளையூரணி ஊராட்சி மாநகரில் இணைக்கப்பட்டிருந்தது. பின்பு காரணம் அறிவிக்காமலேயே மாநகராட்சியில் இணைக்கப்படவில்லை என்று அறிவிப்பட்டது. தொலைவில் உள்ள பகுதிகள் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டும், மாநகராட்சி ஒட்டிய பகுதியான மாப்பிள்ளையூரணி ஊராட்சியை மாநகராட்சியுடன் இணைக்காததும் அந்த பகுதி மக்களை அரசு வஞ்சிப்பதாக உள்ளது. எனவே மாப்பிள்ளையூரணி ஊராட்சியை தூத்துக்குடி மாநகராட்சியுடன் இணைத்து 4வது பைப் லைன் திட்டத்தை மாப்பிள்ளையூரணி ஊராட்சி பகுதிகளுக்கு விரிவுப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.


### கோவை கண்ணம்பாளையத்தில்

## உலக மகளிர் தின விழா

இந்திய மாதர் தேசிய சம்மேளனம் மற்றும் ஏஐடியுசி சார்பில் கோவை மாவட்டம், சூலூர் கண்ணம்பாளையத்திற்குட்பட்ட திரு.வி.க. நகரில் உலக மகளிர் தின விழா மாதர் சம்மேளன மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.சுதா தலைமையில் நடைபெற்றது.

ஏஐடியுசி கொடியினை தனலட்சுமி ஏற்றி வைத்தார். மாதர் சம்மேளன மாவட்டச் செயலாளர் க.சுமதி, கோவை மாமன்ற உறுப்பினர் சாந்தி சந்திரன், கட்சியின் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் பெ.மௌனசாமி, வட்டார செயலாளர் வே.வசந்தகுமார், மாவட்டக் குழு உறுப்பினர் பி.சுப்பிரமணியம், கிளைச் செயலாளர் கே.அங்கப்பன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு வாழ்த்திப் பேசினார்கள். பள்ளி மாணவிகள் வினோதினி, ஜெனி பிரசில்லா, பூஜா, சர்மிளா தேவி ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள். முன்னதாக, பெண்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது. தோழர் ஜெகதாம்பாள் நன்றி கூறினார்.

## சிபிஐ சாத்தூர் முன்னாள் நகர செயலாளர் எஸ்.எஸ்.முத்து மறைவு



விருதுநகர் மாவட்டம், சாத்தூர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் நகர செயலாளராக பணியாற்றியவர் எஸ்.எஸ். முத்து (73). உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் சிகிக்சை பெற்று வந்தார். சிகிச்சை பலனளிக்காமல் காலமானார். அவருக்கு மனைவி, ஒரு மகன், ஒரு மகள் உள்ளனர். தகவலறிந்து மாவட்ட பொருளாளர் எஸ்.பழனிக்குமார், துணை செயலாளர் சமுத்திரம், இடைகமிட்டி செயலாளர்கள் சுவாமிநாதன், ஜீவா, சக்கணன், நகர செயலாளர் ஜான்ராஜா, திமுக நகர செயலாளர் குருசாமி, ஒன்றிய செயலாளர் கடற்கரைராஜ், மதிமுக நகர செயலாளர் கணேஷ்குமார், விசிக சந்திரன் சிபிஎம் சரோஜா, விஜயகுமார் உள்பட ஏராளமானோர் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள். மயானத்தில் நடந்த இரங்கல் கூட்டத்தில் நகர்மன்ற துணைத்தலைவர் ப.அசோக் உள்ளிட்டோர் பேசினர்.

# ஆளுநர் ரவியை கண்டித்து ஆர்ப்பாட்டங்கள்




மாமேதை கார்ல் மார்க்ஸ் குறித்து அவதூறான கருத்தை வெளியிட்ட தமிழக ஆளுநர் ஆர்.என். ரவியைக் கண்டித்தும், மேலும், ஆன்லைன் சூதாட்ட தடை சட்ட மசோதாவை திருப்பி அனுப்பியதைக் கண்டித்தும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்டக் குழுவின் சார்பில், ஈரோட்டில் மாவட்ட செயலாளர் எஸ்.டி.பிரபாகரன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாவட்ட துணைச் செயலாளர்கள் எஸ்.சின்னசாமி, எம்,குணசேகரன், மாவட்டக்குழு உறுப்பினர்கள் சி.எம்.துளசிமணி, எஸ்.பொன்னுசாமி ஏஐடியுசி மாவட்டச் செயலாளர் வி.செல்வராஜன் உள்ளிட்டோர் உரையாற்றினார். கட்சியின் ஈரோடு வட்டாரச் செயலாளர் ஜி.கல்யாணசுந்தரம், மாவட்டப் பொருளாளர் என்.ரமணி, சென்னிமலை ஒன்றிய செயலாளர் எம்.செங்கோட்டையன், பெருந்துறை ஒன்றிய செயலாளர் வி.சி.செந்தில்குமார், கொடுமுடி ஒன்றிய செயலாளர் ஆர்.ரணதிவேல் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சிவகிரி: சிவகிரி பழைய பஸ்ஸ்டாண்ட் பகுதியில் இந்தியக் கம்யூனிஸ் ட்கட்சி சார்பில் ஆர்ப்பட்டம் நடைபெற்றது. கொடுமுடி ஒன்றிய பொருளாளர் வி.சண்முகம் தலைமை தாங்கினார். கொடுமுடி ஒன்றியசெயலாளர் ரணதிவேல், நகரசெயலாளர் வரதராஜன், மூத்த தோழர் கே,எம். முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய துணைசெயலாளர் எஸ்.பி. மாரிமுத்து, த.மணிவண்னன், இந்திய தேசிய மாதர்சங்க செயலாளர் ஆர். செல்வி, அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற ஒன்றிய செயலாளர் வேல்முருகன், திராவிடர் கழக மாவட்ட அமைப்பாளர் எஸ்.கே.சண்முகம், காங்கிரஸ் மாவட்ட செயலாளர் வாசுதேவன், முன்னாள் கவுன்சிலர் (சி.பி.எம்) வி.ஜோதி உட்பட பலர் பேசினர். மூத்த தோழர் ரத்தினசாமி நன்றி கூறினார்.

### “சமூக நல்லிணக்கத்தை வலியுறுத்தி”,

## சமாதானம் மற்றும் முன்னேற்றத்திற்கான இந்திய டாக்டர்கள் சங்கத்தின் அகில இந்திய மாநாடு




“சமூக நல்லிணக்கத்தை வலியுறுத்தி”, சமாதானம் மற்றும் முன்னேற்றத்திற்கான இந்திய டாக்டர்கள் சங்கத்தின் அகில இந்திய மாநாடு மார்ச் 11 மற்றும் 12 ஆகிய தேதிகளில் டெல்லியில் நடைபெற்றது.

சமாதானம் மற்றும் முன்னேற்றத்திற்கான இந்திய டாக்டர்கள் சங்கம் (ஐடிபிடி) இந்தியா முழுவதும் செயல்படும் அமைப்பாகும்.

ஐடிபிடி, அரசியல் கட்சிகளின் சார்பாற்ற மருத்துவர்கள் அமைப்பாகும்.

உலக சமாதானத்திற்காகவும், முன்னேற்றத்திற் காகவும், அனைவருக்கும் நல வாழ்வு கிடைப்பதற் காகவும் செயல்படும் அமைப்பாகும்.

ராணுவத்திற்காக, போர் தளவாடங்களுக்காக உலக நாடுகள் செலவு செய்கின்ற தொகையை, மக்களுடைய நலவாழ்விற்கும், கல்விக்கும், பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்கும், சத்தான உணவை அனைவருக்கும் வழங்குவதற்கும், வேலை வாய்ப்புகளுக்கும், குடியிருப்புகளுக்கும், மருத்துவ சேவைகளுக்கும் ,செலவு செய்ய வைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு ஐடிபிடி செயல்படுகிறது.

போர்களை தடுக்க வேண்டும், போரற்ற, வன்முறைகளற்ற, அமைதி தவழும் உலகை உருவாக்க வேண்டும், இயற்கை இடர்பாடுகள் பாதிப்பிற்கு உதவ வேண்டும், உழைக்கும் வர்க்க போராட்டங்களுக்கு உதவிட வேண்டும் என்ற நோக்கோடு ஐடிபிடி செயல்படுகிறது.

இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க அமைப்பான, ஐடிபிடி யின், அகில இந்திய 12 வது மாநாடு, டெல்லியில், தீனதயாள் உபாத்தியாயா சாலையில் உள்ள, காந்தி அமைதி அறக்கட்டளை அரங்கில், 2023 மார்ச் 11 மற்றும் 12 ஆம் தேதிகளில் நடைபெற்றது.

சமூக நல்லிணக்கம், அனைவருக்கும் நலவாழ்வு, உலக சமாதானம் என்ற முழக்கத்தோடு, இம்மாநாடு நடைபெற்றது.

மாநாட்டின் துவக்க நாளான 11.03.2023 அன்று காலை மருத்துவ மாணவர்கள் பிரிவின் மாநாடு நடைபெற்றது. இம் மாநாட்டில் தமிழ்நாடு, மகாராஷ்டிரா மற்றும் டெல்லி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த பல் மருத்துவ பயிற்சி மருத்துவர்கள், ஸ்ரீ நாத், ஐஸ்வர்யா லட்சுமி, காளிதாசன், நித்திஷ் குமார், சாய் வைஷ்ணவி, வந்தனா ஆகியோர் கலந்து கொண்டு பல்வேறு தலைப்புகளில் உரையாற்றினர்.

11.03.2023 பிற்பகல் மாநாட்டின் துவக்க நிகழ்ச்சி நடைபெற்றது. ஐடிபிடி யின் அகில இந்திய தலைவர் டாக்டர் சூடன் தலைமை தாங்கினார்.

ராணுவ முன்னாள் தளபதி மேஜர் ஜென்ரல் வினோத் சைகால் மாநாட்டை துவக்கிவைத்து சிறப்புரையாற்றினார்.

அணுப் போர் தடுப்பிற்கான சர்வதேச டாக்டர்கள் சங்கத்தின் இணை தலைவர் டாக்டர் அருண் மித்ரா, தர்மபுரி மக்களவை உறுப்பினர் டாக்டர் எஸ். செந்தில் குமார் எம்.பி, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அஷிஸ் பாஷா, ஏஐடியூசி பொதுச் செயலாளர் அமர்ஜித் கவுர், அச்சின் விநாயக் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

வங்கதேசம், பாகிஸ்தான், இலங்கை, நேப்பாளம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த, சமாதானம் மற்றும் முன்னேற்றத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் தலைவர்கள் காணொலி வாயிலாக வாழ்த்துரை வழங்கினர்.

நலவாழ்வு அடிப்படை உரிமை என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில், டாக்டர் ஏ.ஆர்.சாந்தி, டாக்டர் ரித்து பிரியா, டாக்டர் ஷியாம் சுந்தர் தீப்தி, டாக்டர் ரஜனி ஆகியோர் உரையாற்றினர்.

உலக சமாதானம் என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் அச்சின் விநாயக் சிறப்புரையாற்றினார்.

12.03.2023 அன்று காலை, சமூக நல்லிணக்கம் என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில், டாக்டர் ஆதித்திய முகர்ஜி, வடசென்னை மக்களவை தொகுதி உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் ஆகியோர் உரையாற்றினர்.

சமூக செயல்பாட்டில் மருத்துவர்களின் பங்கு என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் டாக்டர் ஷஜீத், டாக்டர் ஷஹில் வுர் ரஹ்மான், பினாய் விஸ்வம் எம்.பி ஆகியோர் உரையாற்றினர்.

மாநாட்டின் இறுதியில் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். டாக்டர் அருண்மித்ரா தலைவராகவும், டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத், சத்திய ஜித் சிங் ஆகியோர் துணைத் தலைவர்களாகவும், டாக்டர் ஷஹில் வுர் ரஹ்மான் பொதுச் செயலாளராகவும், டாக்டர்கள் ஏ.ஆர்.சாந்தி, சஜீத், ரஜனி ஆகியோர் துணைச் செயலாளர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த டாக்டர் ஜி.ரமேஷ், தேசியக் குழுவிற்கும், மருத்துவ மாணவர் ஸ்ரீநாத் வாசுதேவன் ஐடிபிடி மாணவர் பிரவின் சார்பில் தேசியக் குழுவிற்கும் தேர்வு செய்யப்பட்டனர்.

டெல்லியில் நடைபெற்ற இந்த மாநாட்டில், தமிழ்நாட்டில் இருந்து, மாநில பொதுச் செயலாளர் டாக்டர் ஜி .ஆர்.இரவீந்திரநாத், மாநிலச் செயலாளர் டாக்டர் ஏ.ஆர். சாந்தி, டாக்டர் ஜி.ரமேஷ், ஆகியோருடன், 4 மாணவிகள் உட்பட 11 மருத்துவ மாணவர்களும் கலந்து கொண்டனர். மொத்தம் 14 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

மாநாட்டிற்கு முன்னதாக, 10.03.2023 அன்று, ஐடிபிடி மருத்துவ மாணவர்களின் கலந்துரையாடல் நிகழ்ச்சி, டெல்லி எய்ம்ஸ் மருத்துவ நிறுவனத்தில் நடைபெற்றது.

# மக்கள் எதிர்பார்ப்புகளை கருத்தில் கொள்ள வேண்டும்

## பட்ஜெட் குறித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கருத்து

தமிழ்நாடு அரசின் நிதியமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் சட்டமன்றத்தில், 2023– 24 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை 20.03.2023 அன்று தாக்கல் செய்துள்ளார்.

நிதிநிலை அறிக்கை தமிழ் மொழி வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் கவனம் செலுத்தியுள்ளது. மொழிப்போர் தியாகிகள் தாளமுத்து நடராசன் நினைவிடம் அமைப்பது, மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நினைவு நூலகம் திறப்பது, கணினி பயன்பாட்டிற்கு தக்கபடி தமிழ் எழுத்துக்களை மேம்படுத்துவது என்று பல முயற்சிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

சட்டமன்றத் தேர்தலின் போது திமுகழக அறிக்கையில் அறிவித்தபடி குடும்பப் தலைவிகளுக்கான உரிமைத் தொகை மாதம் ரூ1000 வழங்கப்படும் என்று அளித்த உறுதிமொழியை வரும் செப்டம்பர் மாதம் முதல் அமலாக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பழங்குடியினர் நலத்துறையினர் பொறுப்பில் இயங்கி வந்த பள்ளிகள் உட்பட அனைத்துப் பள்ளிகளும் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் கொண்டு வருவது, அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம், அயோத்திதாச பண்டிதர் குடியிருப்பு மேம்பாடு திட்டம். மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை உயர்த்தியிருப்பது, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் இரண்டாம் கட்டப்பணிக்காக நிதி ஒதுக்கீடு செய்திருப்பது, கோவை மாநகரில் மெட்ரோ ரயில் திட்டத்தை மேற்கொள்வது போன்ற நடவடிக்கைகள் வரவேற்கத்தக்கவை.

மின்சாரத் தேவையை பூர்த்தி செய்ய தனியார் பங்களிப்பு திட்டமான பிபிபி திட்டம் அறிவித்திருப்பது தமிழ்நாட்டின் மின் வழங்கல் கொள்கையை பாதிக்கும். மின் நுகர்வோர்களை தனியாரிடம் தள்ளிவிடும் அரசின் பல்வேறு துறைகளில் தினக்கூலி, ஒப்பந்தப்பணி, வெளி யிடப்பணி போன்ற திட்டங்களில் பணிபுரிந்து வரும் பல்லாயிரம் தொழிலாளர்களின் உணர்வுகளையும், உரிமைகளையும் நிதி நிலை அறிக்கை கருத்தில் கொண்டிருக்க வேண்டும். அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள் வலியுறுத்தி வரும் பழைய ஓய்வூதியத் திட்டம் குறித்து நிதி நிலை அறிக்கை அமைதி காப்பது அப்பகுதியினருக்கு ஏமாற்றமாக அமைந்துள்ளது. பொதுப் போக்குவரத்தை விரிவு படுத்த வேண்டிய தேவை அதிகரித்து வரும் சூழலில் போக்குவரத்து துறைக்கான நிதி ஒதுக்கீட்டை குறைத்திருப்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். கோயில் மனைகளில் குடியிருந்து வருவோர் மனை நில உரிமை கோரி போராடி வருவதையும் நிதியமைச்சர் கருத்தில் கொள்ளவில்லை.

நிதி மேலாண்மை செய்வதில் வருவாய் பற்றாக்குறை குறைக்கப்பட்டது நிர்வாகத் திறனுக்கு சான்றாக அமைந்துள்ளது. எனினும் வீட்டு வரி, சொத்து வரி, மின்கட்டணம், மற்றும் பால் விலை உயர்வுகளாலும், சமையல் எரிவாயு, பெட்ரோல், டீசல் விலை உயர்வுகளின் தாக்குதலுக்கு ஆளாகியுள்ள மக்களின் எதிர்பார்ப்பு அதிகம் என்பதை நிதியமைச்சர் கருத்தில் கொள்ள வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

### காட்டு தோட்டம் மண் நீர் மேலாண்மை ஆராய்ச்சி பண்ணையில் பணியாற்றும்

# தினக்கூலி பணியாளர்களை நிரந்தரம் செய்க!




ஏஐடியூசி அரசு பண்ணை தொழிலாளர் சங்கத்தின் காட்டுத் தோட்டம் கிளை கூட்டம் தஞ் சாவூர் ஏஐடியூசி அலுவலகத்தில் பி.கிருஷ்ணவேணி தலைமையில் நடைபெற்றது. ஏஐடியூசி மாநில செயலாளர் சி.சந்திரகுமார், சங்க மாநில பொதுச் செயலாளர் உ.அரசப்பன், சங்க நிர்வாகிகள் வனிதா, பிரபாகரன், சாந்தி, பரிமளா உள்ளிட்டோர் பங்கேற்றனர். கூட்டத்தில் காட்டுத் தோட்டம் பண்ணையில் 40 தின கூலி தொழிலாளர்கள் பணிபுரிந்த வேலையை, தற்பொழுது 17 தினக்கூலி தொழிலாளர்களை வேலை பார்க்க வைப்பதால், மிகுந்த பணிச்சுமையும், வேலை நேரத்திற்கு மேல் கூடுதல் நேரம் வேலை பார்க்க வேண்டிய நிலையும் உள்ளது. எனவே புதிதாக தினக்கூலி பணியாளர்கள் உடனடியாக நியமிக்க வேண்டும், 17 தொழிலாளர்கள் 10 ஆண்டுகளுக்கு மேல் தினக்கூலியாக தொடர்ந்து பணி புரிந்து வருவதால் அரசு ஆணைப்படி அனைவரையும் பணி நிரந்தரம் செய்ய வேண்டும், பெண் தொழிலாளர்கள் மூட்டை தூக்க வேண்டும் என வற்புறுத்துவதை கைவிட்டு முன்பு போல் டிராக்டரில் ஏற்றி வயல்களுக்கு மூட்டைகளை கொண்டு செல்ல ஏற்பாடுகளை செய்ய வேண்டும், ஓய்வுபெற்ற பணியாளர்கள் அனைவருக்கும் ஓய்வூதியம் கிடைக்கச் செய்ய வேண்டும், பணிக்கொடை வழங்கல் சட்டப்படி அனைவருக்கும் பணிக்கொடை வழங்க வேண்டும் ஆகிய கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும், மேலும் இக் கோரிக்கைகளை நிறைவேற்றவில்லை என்றால் காட்டுத் தோட்டம் பண்ணை முன்பு வருகிற மார்ச் 28 ஆர்ப்பாட்டம் நடத்துவது என ஒரு மனதாக முடிவெடுக்கப்பட்டது.

# மருத்துவப் பணியாளர்களின் பணிநிரந்தரம் குறித்து அறிவிப்புகள் இல்லை

## சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் கவலை

தமிழ்நாடு பட்ஜெட் குறித்து சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.ரவீந்திரநாத் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

தமிழ்நாடு வரவு செலவு அறிக்கையில், சென்னை கிண்டியில் கட்டப்பட்டு வரும் 1000 படுக்கை வசதி கொண்ட கலைஞர் நினைவு பன்னோக்கு மருத்துவமனை நடப்பாண்டில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வரும் என அறிவித்திருப்பது வரவேற்புக்குரியது.

திருச்சி மகாத்மா காந்தி நினைவு அரசினர் மருத்துவமனையில் ரூ.110 கோடி செலவில் புதிய கட்டிடங்கள் கட்டப்படும் என்பதும், அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய பன்னோக்கு மருத்துவப் பிரிவு கட்டப்படும் என்பதும் வரவேற்புக்குரியது.

மக்கள் நல்வாழ்வுத்துறைக்கு ரூபாய் 18,661 கோடி நிதி ஒதுக்கீடு என்பது போதுமானதல்ல. இது கடந்த ஆண்டைவிட ரூபாய் 928 கோடி மட்டுமே அதிகம். மேலும், 2021–22 ஆண்டிற்கான ,ஒதுக்கீட்டுத் தொகையான ரூபாய் 20,080 கோடியைவிட குறைவானதாகும் .தி.மு.க ,மக்கள் நல்வாழ்வுத் துறைக்கான நிதி ஒதுக்கீடு, மூன்று மடங்காக அதிகரிக்கப்படும் என தேர்தலுக்கு முன்பு கூறியது. தற்பொழுது நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்காதது வருத்தத்தை தருகிறது.

ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும், பல்மருத்துவர்கள், ஆயுஷ் மருத்துவர்கள், செவி லியர்கள், மருத்துவப் பணியாளர்களின் பணிநிரந்தரம் குறித்து, அறிவிப்புகள் ஏதும் இல்லாதது ஏமாற்றமளிக்கிறது. பணிநிரந்தரம் வழங்கப்படும் என்ற ,திமுக வின் தேர்தல் வாக்குறுதி நிறைவேற்றப்படாமல் உள்ளது கவலை அளிக்கிறது.

காலை உணவு திட்டம், அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளுக்கும் விரிவாக்கம் செய்யப்படும் என்பது வரவேற்புக்குரியது. இது குழந்தைகளிடையே நிலவும் ஊட்டசத்துக் குறைபாட்டை போக்க உதவும்.

இவ்வாறு டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத் கூறியுள்ளார்.

# மக்கள் பிரச்சினைகளை தீர்க்க வலியுறுத்தி திருச்சியில் ஆர்ப்பாட்டம்



தமிழ்நாடு ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்கம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் சார்பில் திருச்சி மாவட்டம் மணிகண்டம் ஒன்றியத்தில் உள்ள நாச்சிகுறிச்சி பஞ்சாயத்தில் சாலை வசதி, மின்விளக்கு வசதி, வடிகால் வசதி, பொது கழிப்பிட வசதி உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்னெடுத்து, நாச்சிகுறிச்சி மக்களிடம் கையெழுத்து இயக்கம் நடைபெற்று, கட்டட சங்க மாவட்ட தலைவர் எம்.ஆர்.முருகன் தலைமையில் திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் மாநில மாவட்ட நிர்வாகம் குறைகளை சரி செய்து தரக் கோரி கோஷங்கள் எழுப்பி, மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுக்கப்பட்டது.

இதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் எம்.செல்வராஜ், கட்டட சங்க மாநிலத் துணை தலைவர் க.சுரேஷ் எம்.சி., சிபிஐ மாவட்ட செயலாளர் எஸ்.சிவா, கட்டட சங்க மாவட்ட செயலாளர் சி.செல்வகுமார், மாவட்டத் துணைத் தலைவர் எஸ்.முத்தழகு, தேசிய குழு உறுப்பினர் டி.நிர்மலா, மாதர் சங்க ஒன்றிய பொருளாளர் எம்.ரஷியாபேகம், ஒன்றிய துணைச் செயலாளர் பி.வித்யா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# நிறுத்தப்பட்ட முதியோர் ஓய்வூதியம் வழங்கக் கோரி ஆர்ப்பாட்டம்




இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு முதியோர்களுக்கான ஓய்வூதியத்தை கடந்த ஆறு மாத காலமாக நிறுத்தி வைத்ததை கண்டித்தும், இராமநாதபுரம் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து நிவாரணம் வழங்க வலியுறுத்தியும்,

திருவாடானை தாலுகாவில் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக வீட்டு மனைப்பட்டா கேட்டு போராடி வருபவர்களுக்கு பட்டா வழங்க வலியுறுத்தியும், முறையாக பட்டா வழங்கப்பட்ட மக்களுக்கு அதற்குரிய இடத்தை அளந்து உறுதிப்படுத்த வலியுறுத்தியும்,

மீனவர் நலவாரியத்தில் பதிவு செய்த 60 வயதைக் கடந்த மீனவர்கள் அனைவருக்கும் நிபந்தனையின்றி ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் என்.எஸ்.பெருமாள் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடத்தி, மாவட்ட ஆட்சியரிடம் மனு வழங்கப்பட்டது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக்குழு உறுப்பினர் தி.இராமசாமி ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்துப் பேசினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் பொ.லிங்கம் நிறைவுரையாற்றினார்.

ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் என்.கே.ராஜன், மாவட்ட துணைச் செயலாளர்கள் ஆர்.தர்மராஜன், மாவட்ட பொருளாளர் கே.ஜீவா, வி.ச.மாவட்டச் செயலாளர் ஆர்.கருணாநிதி, மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் எஸ்.முருக பூபதி, கே. சுப்பிரமணியன், கே.ஆர்.சுப்பிரமணியன் மாவட்ட மீனவர் சங்க செயலாளர் சி.ஆர். செந்தில்வேல், வி.தொ.ச. மாவட்டத் தலைவர் குருசாமி மற்றும் பாதிக்கப்பட்ட முதியோர்களுடன் 300க்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

## இந்த வார தம்பிக்குறள்

### 111. கற்றதில் காலமறி

**காலமல்லாக் காலம் கனியா கருத்துக்கள்**
**காலம் கருதல் கருத்து.**

உரிய காலம் வராதபோது, எப்படி முயன்றாலும் சிந்தனைகள் கருத்தில் கொள்ள மாட்டா. காலம் வரும் பொழுது கருத்துக்கள் (காலச் சூழல் காரணமாக) ஊற்றெடுக்கும்.

**காலம் கடந்த கருத்தைக்கைக் கொண்டாஅல்**
**காலம் கடத்தும் கடைக்கு.**

காலத்துக்குப் பொருந்தாத கருத்துக்களைக் கடைபிடிக்கும் அறிவற்றவனின் கால மெல்லாம் வீணாகக் கழியும்.

# நூல் நயம்

## புறம்போக்கு நிலங்களில் சுய உதவிக்குழு தோட்டம்




பெண்கள் எந்த தேவைகளுக்காகவும் மற்றவர்களை சார்ந்து இருக்கக் கூடாது, தங்கள் சுய தேவைகளை தாங்களே பூர்த்தி செய்து கொள்ள வேண்டும் என்கின்ற அடிப்படையில், அரசால் ஆதரிக்கப்படும் ஒரு அமைப்பு மகளிர் சுய உதவிக் குழுக்கள். இவர்கள் தங்கள் பொருளாதாரத்தையும், சமூக தேவைகளையும் தாங்களே திட்டமிட்டு வளர்த்துக் கொள்ளும் வகையில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதன் மூலம் சில பெண்கள் சமூகத்தில் நல்ல வளர்ச்சியை கண்டிருக்கிறார்கள். இதை அனைத்து பெண்களும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்கிற உந்துதலிலே 'புறம்போக்கு நிலங்களில் சுயஉதவிக் குழு தோட்டம்' என்கிற இந்த நூலை பாரதி சின்னச்சாமி எழுதி உள்ளார்

கிராமப்புறங்களில் வீணாகக் கிடக்கும் அரசு தரிசு நிலங்கள், புறம்போக்கு நிலங்களை ஒவ்வொரு குழுவுக்கும் குறைந்தபட்சம் 15 சென்ட் விதம் பகிர்ந்து அளித்தால், அந்த நிலத்தை பயன்படுத்தி மகளிர் குழுக்களில் இருக்கும் பெண்கள் காய்கறி தோட்டங்கள், கீரை தோட்டங்களை அமைத்து பராமரித்தால். அவர்களுக்கு தேவையான காய்கறி, கீரைகளை, பழங்களை காச கொடுத்து வாங்க வேண்டிய தேவை இருக்காது. தங்களுக்கு போக எஞ்சியவற்றை சமூகத்தில் இருக்கிற மற்ற குடும்பங்களுக்கும் அவர்களால் பகிர்ந்து அளித்து சிறிது பொருளாதார நிலைமைகளையும் உயர்த்திக் கொள்ள முடியும். ஒவ்வொரு குழுவில் இருக்கிற ஒவ்வொரு பெண்களும், ஒவ்வொரு நாளைக்கு சில மணி நேரங்களை பயன்படுத்தினாலே இந்த தோட்டங்களை பராமரித்து விட முடியும். இதனால் அவர்கள் சமூக பொருளாதார நிலையில் ஒரு மாற்றம் ஏற்படும் என்பதை இந்த நூல் தெளிவாக விளக்கி உள்ளது. சுய உதவி குழுக்களில் சேராமல் உள்ள பெண்களையும் அரசாங்கம் குழுவில் சேர்த்து, அவர்களுக்கும் குழு தோட்டத்தை அமைத்து தர வேண்டும். அவர்களுக்கு தேவையான நிலம், உரம், தண்ணீர் வசதி போன்றவற்றை அரசாங்கம் ஏற்படுத்தி தர வேண்டும். இவற்றை உள்ளூராட்சி கிராம சபைகள் கண்காணிக்க வேண்டும். இதன் மூலம் கிராமப்புறங்களில் தன்நிறைவு அடையும் என்ற நல்ல நோக்கோடு எழுதப்பட்டுள்ள இந் நூலை அனைவரும் வாங்கி படிக்க வேண்டும்.

**– இன்சுவை பாரதி**

**நூலாசிரியர்** : பாரதி சின்னச்சாமி
**பக்கம்** : 220 விலை : 240
**வெளியீடு** : **ஏழில்மதி பதிப்பகம், புதிய எண்8/166 பூங்கா நகர் வடக்கு, தொப்பம்பட்டி அஞ்சல், கோயம்புத்தூர்–641017**

## காலத்தை வென்ற மாவீரர்கள்




சமூகத்தில் செயற்கரிய செயல்களை செய்தவர்களும், சமூக அடக்குமுறைகளை எதிர்த்து போராடியவர்களும், பிறருக்காக தங்கள் இன்னுயிரை அளித்தவர்களும் மாவீரர்கள் ஆவார்கள். இப்படிப்பட்ட மாவீரர்கள் தான் நாட்டுப்புற தெய்வங்களாக மக்களால் போற்றி வணங்கப்படுகிறார்கள். வீரன் என்ற சொல், பொதுவாக ஓர் ஆற்றல் மிக்கவனையும், அச்சமின்றி போர் செய்பவனையும் குறிப்பதாகும் . இதன் அடிப்படையில் ஒரு படை அணியில் இடம் பெற்றுள்ள போர் புரிவோரைக் குறிப்பதாக வீரன் என்ற சொல் அமைகிறது.

காவியங்களின் தலைவனாக மாவீரன் ஒருவன் இடம்பெறுவது ஒரு மரபாகும். ஹீரோ என்ற ஆங்கில சொல் படைவீரனை மட்டுமின்றி, காவிய அல்லது நாடகத் தலைவனை குறிக்கும் சொல்லாகவும் வழங்குகிறது. இவன் வீர தீர செயலுக்காகவோ, நற்செயலுக்காகவோ பலராலும் போற்றப்படும் மனிதன். கதைப்பாடல்கள் என்பன நாட்டார் மரபு சார்ந்தும், இலக்கிய மரபு சார்ந்தும் வெளியாகி உள்ளன. மரபு சார்ந்த கதை பாடல்களிலும், கதைப்பாடல் தலைவன் ஒருவன் இடம்பெற்று இருப்பான். புராணங்களும், பழ மரபுக் கதைகளும் காவியங்களுக்கு முந்தியவை என்ற யூகத்துடன் ஆராய்ச்சி செய்துள்ளார். தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் பெரும்பாலான நாட்டார் ஆண் கடவுளர்கள். மாவீரர்களாக உண்மையில் வாழ்ந்து, கொலையுண்டு மடிந்து போனவர்கள் தான். இக் கடவுளர்களும் வட்டார எல்லைக்குள்ளாகவே வழிபடப்படுகிறார்கள். சான்றாக முத்துப்பட்டன், மதுரை வீரன், காத்தவராயன், அண்ணன்மார் சாமி ஆகியோரை குறிப்பிடலாம். இந்திய சூழலில் மாவீரன் என்ற நிலைக்கும், கடவுள் என்ற நிலைக்கும் இடையே அதிக வேறுபாடு இல்லை. உள்ளூர் மாவீரன் என்ற அடிப்படை நிலையில் தொடங்கி, கடவுள் என்ற உயர்நிலைக்கு செல்லும் படிநிலைகள் இவை. ஒரு சில சமூகம் மற்றும் உளவியல் தன்மைகள் ஓர் உள்ளூர் மாவீரனை, கடவுள் நிலைக்கு உயர்த்தலாம்.

இப்படித்தான் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாக பல போராட்டங்களை முன்னெடுத்தவர்கள். மக்களுக்காக மரணிக்க தயாரானவர்களை மக்கள் மாவீரர்களாகவே பார்த்தனர் என்பதை பொருத்தமாகவே நூல் ஆசிரியர் பதிவு செய்துள்ளார். பாரதிய ஜனதா கட்சி எவ்வாறு வெற்றி பெறுகிறது. பீகாரில் இருந்து தீகார் வரை , திராவிட ஆட்சியில் சமூக அசைவுகள் போன்ற பல்வேறு பொருள்கள் குறித்தும் ஆழமான கட்டுரைகள் இதில் இடம் பெற்றுள்ளன. ஆ.சிவசுப்பிரமணியன் எழுதிய காலத்தை வென்ற மாவீரர்கள் என்ற இந்த நூல். இந்திய அரசியல் சமூக சூழலை நாம் புரிந்து கொள்ள உதவும் நல்ல நூல்.

**–சமரன்**

**நூலாசிரியர்** : **அ. சிவசுப்பிரமணியன்**
**பக்கம்** : **256** **விலை: 325**
**வெளியீடு** : **நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை–50**

நிதிநிலை அறிக்கையில்

# மகளிர் உரிமைத் தொகை ரூ.1000

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பு ● இரா.முத்தரசன் பேட்டி



தமிழக நிதிநிலை அறிக்கையில் மகளிர் உரிமைத் தொகை ரூ.1000 வழங்கப்படும் என்கிற அறிவிப்பு இடம் பெற்றிருப்பது வரவேற்கத்தக்கது என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தெரிவித்தார்.

தருமபுரி மாவட்டத்தில் கட்சி நிகழ்ச்சியில் பங்கேற்க வந்த அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதில், பல்வேறு முக்கியத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் அம்பேத்கர் படைப்புகளை தமிழில் மொழிப்பெயர்க்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதேபோல தேர்தல் நேரத்தில் அறிவித்த முக்கிய வாக்குறுதியான எல்லோராலும் கருதப்பட்ட மகளிர் உரிமைத் தொகை ரூ.1000 வழங்கப்படும் என்கிற அறிவிப்பு இடம்பெற்றுள்ளது வரவேற்கத்தக்கது. பெண்கள் நகரப் பேருந்துகளில் கட்டணமின்றி பயணம் செய்யும் திட்டத்துக்கு தொடர்ந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒகேனக்கல் இரண்டாவது கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.7145 கோடியில் செயல்படுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் கடந்த 2010 இல் தொடங்கப்பட்டது. தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட மக்கள் புளோரைடு கலந்த தண்ணீரை பருகி வந்ததால், பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாகி வந்தனர். இதனை தவிர்த்து, தருமபுரி மாவட்டம் வழியாக செல்லும் ஒகேனக்கல் காவிரி ஆற்றிலிருந்து குடிநீர் எடுத்து அதனை இந்த மாவட்ட மக்களுக்கு வழங்க வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து போராடியது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் தற்போது இரண்டாவது திட்டம் குறித்த அறிவிப்பு மகிழ்ச்சியை அளிக்கிறது.

இதேபோல, கோவை மதுரையில் மெட்ரோ ரயில் திட்டம், தமிழ் வளர்ச்சிக்கு பல்வேறு திட்டங்கள், கணினி தமிழ் மாநாடு, தஞ்சையில் சோழர் கால பொருள்கள் இடம்பெறும் அருங்காட்சியகம், மதுரை அரசு மருத்துவமனை பன்னோக்கு மருத்துவமனையாக உயர்த்துவது, கலைஞர் நூற்றாண்டு நினைவு நூலகம் திறப்பு அறிவிப்பு உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகள் பாராட்டுக்குரியது. இதேபோல ரூ.62 ஆயிரம் கோடியாக இருந்த வருவாய் பற்றாக்குறை ரூ.30 ஆயிரம் கோடியாக குறைந்திருப்பது முதல்வர் மு.க.ஸ்டாலினின் நிர்வாகத் திறமை காட்டுகிறது.

அதேவேளையில், மின்தேவையை அதிகரித்து தனியார் துணையுடன் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். தனியார் பங்களிப்பு என்பது சலுகைகளை பறிபோகும் அபாயத்தை உருவாக்கும். பழைய ஓய்வூதியத் திட்டம் தொடர்பான அறிவிப்பு இல்லாதது ஏமாற்றம் அளிக்கிறது. இதேபோல, மழைக்காலங்களில் காவிரி ஆற்றில் மிகையாக செல்லும் நீரை, தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஏரிகளில் நிரப்பும் திட்டம் குறித்து அறிவிப்பு இல்லை. இதனை மானியக் கோரிக்கையின்போது கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

மகளிர் உரிமைத் தொகை அறிவிப்பு தொடர்பாக தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை அதனை அரசு அமைத்த நாளிலிருந்து கணக்கிட்டு வழங்க வேண்டும் என அறிவித்திருந்தார். மாநில அரசு தனது வாக்குறுதிகளை நிறைவேற்றுகிறது. ஆனால் கடந்த 2014 இல், மக்களவைத் தேர்தலில் பிரதமர் மோடி அறிவித்த ஆண்டுக்கு இரண்டு கோடி பேருக்கு வேலை, வெளிநாடுகளில் உள்ள கறுப்புப் பணம் மீட்டு ஒவ்வொருவரின் வங்கி கணக்கில் ரூ 15 லட்சம் தருவதாக சொன்ன வாக்குறுதிளை நிறைவேற்ற அண்ணாமலை, மத்திய அரசுக்கு அறிவுறுத்த வேண்டும்.

நாடாளுமன்றத்தை வழக்கமாக எதிர்க்கட்சியினர் தான் முடக்குவார்கள். ஆனால் ஆளும் கட்சியினரே இப்போது நாடாளுமன்ற கூட் டத்தை முடக்கி இருப்பது வியப்பாக உள்ளது. தர்மபுரியில் இந்திய கம்யூனிஸ்டு கட்சி அலுவலகம் வட்டார வளர்ச்சி அலுவலர் குடியி ருப்பு பகுதியில் செயல்பட்டு வருகிறது. இந்த அலுவலகம் இந்திய கம்யூனிஸ்டு கட்சிக்கு சொந்தமானது. இதை கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட சிலர், அறக்கட்டளையாக பெயர் மாற்றி பதிவு செய்துள்ளனர். இந்த அலுவலக விவகாரத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினருக்கு எந்தவித தொடர்பும் இல்லை. எனவே, இதில். அந்த கட்சியினர் தலையிடகூடாது. இதனால் இடதுசாரிகளின் ஒற்றுமை பாதிக்கும். இது நாகரீகமும் இல்லை என்றார். பேட்டியின்போது பழங்குடி மக்கள் சங்கத்தின் மாநில சிறப்பு கௌரவ தலைவர் ந.நஞ்சப்பன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் எஸ்.தேவராசன், மாவட்ட செயலாளர் எஸ்.கலைச்செல்வம், துணை செயலாளர்கள் கா.சி.தமிழ்க்குமரன், எம்.மாதேஸ்வரன்,மாவட்ட பொருளாளர் சி.மாதையன் ஆகியோர் உடனிருந்தனர்.

சுழலும் உலகம்

# அமெரிக்காவில் திவாலாகும் வங்கிகள்

கடந்த வார வெள்ளிக்கிழமை முதலே சிலிக்கான் வேலி வங்கியின் திவால் பற்றிய செய்தி உலகம் முழுவதும் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது. சிலிக்கான் வேலி வங்கி திவால் நிலைக்குத் தள்ளப்பட்டதைத் தொடர்ந்து நியூயார்க்கைச் சேர்ந்த பிராந்திய வங்கியான சிக்னேச்சர் வங்கியும் (Signature Bank) திவாலானதாக அறிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அமெரிக்காவைச் சேர்ந்த அமெரிக்காவின் மூன்றாவது பெரிய வங்கியான ஃபஸ்ட் ரிபப்ளிக் வங்கியும் (First Republic Bank) திவாலாகி, மூடப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவில் அடுத்தடுத்து வங்கிகள் திவாலாகியுள்ளதை அடுத்து, இன்னமும் பல வங்கிகள் திவாலாகலாம் என வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.



# ● மே 6 மாநில மாநாடு

# ● மே-ஜூன் மாவட்ட / துறைசார்ந்த மாநாடுகள்

# ● ஜூலை பரப்புரை இயக்கம்

# ● ஆகஸ்ட் 9 பெருந்திரள் அமர்வு

## அனைத்து தொழிற்சங்கக் கூட்ட முடிவுகள்

**அனைத்து மத்திய தொழிற்சங்கங்கள் மற்றும் தேசிய அளவிலான துறை சார்ந்த சம்மேளனங்கள் சேர்ந்து, 30 ஜனவரி 2023 புது தில்லியில் நடத்திய தொழிலாளர் தேசிய மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளைச் செயல்படுத்துவதற்காக தமிழ்நாட்டில் இயங்கும் தொழிற்சங்கங்களின் கூட்டம் 22.3.2023 காலை 10 மணிக்கு, எச்எம்எஸ் அகில இந்திய தலைவர் தோழர் க.அ.ராஜா ஸ்ரீதர் தலைமையில், எழும்பூரில் உள்ள எச்எம்எஸ் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது.**



கூட்டத்தில் தோழர்கள் மு.சண்முகம் எம்பி, கி.நடராஜன், வே.வேலுச்சாமி, ஜி.பழனி (தொமுச), டி.எம்.மூர்த்தி, எம்.ராதாகிருஷ்ணன், எஸ்.காசி விஸ்வநாதன் (ஏஐடியுசி) ஜி.சுகுமாரன் (சிஐடியு) மு.சுப்பிரமணியன், எம்.சுப்பிரமணிய பிள்ளை (எச்எம்எஸ்) டி.வி.சேவியர், ஆதிகேசவன் (ஐஎன்டியுசி) வி.சிவக்குமார், எம்.ரகு (ஏஐயூடியூசி) பி. சங்கரபாண்டியன், எம்.திருநாவுக்கரசு (ஏஐசிசிடியு) இரா.அந்திரிதாஸ், க.ஆறுமுகம் (எம்எல்எப்) ஆர்.சம்பத் (டபுள்யுபிடியுசி) ஏ.சண்முகவேலு (எல்டியுசி) உள்ளிட்டோர் கூட்டத்தில் பங்கேற்றனர்.

“ஒன்றிய அரசாங்கத்தின் நாசகாரக் கொள்கைகளுக்கு எதிராக, தேசிய அளவிலும், துறை சார்ந்த வகையிலும் போராட்டங்களைத் தீவிரப் படுத்த வேண்டும்.

ஆண்டு முழுவதும் ஒருங்கிணைந்த பரப்புரைகள் மற்றும் போராட்டங்களின் வாயிலாக அனைத்து நிலைகளிலும் 2023ஐ போராட்டங்களின் ஆண்டாக உச்சநிலைக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என தொழிலாளர்களின் தேசிய மாநாடு அறைகூவல் விடுத்தது.

மோடி அரசின் புதிய தாராளமயக் கொள்கைக்கு மாற்றாக, நாம் ஏற்கனவே முன்வைத்த 14 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி, தொழிலாளர்களின் தேசிய மாநாட்டின் அழைப்பினை ஏற்று பின்வருமாறு தொடர் போராட்டங்களை மேற்கொள்ள இந்த கூட்டம் முடிவு செய்தது.

### ஏப்ரல் மாதத்தில் மாவட்ட அனைத்து சங்கக் கூட்டங்கள்

மாவட்ட மாநாடுகள், மாவட்ட அளவில் விரிவாக பரப்புரை செய்வதற்கான உத்திகள், சென்னை ‘பெருந்திரள் அமர்வு’க்கு தொழிலாளர்களை திரட்டுதல் உள்ளிட்டவற்றை திட்டமிட்டு, அவற்றை திருச்சியில் கூடும் மாநில மாநாட்டில் முன்வைப்பதற்கான மாவட்ட அனைத்து தொழிற்சங்க கூட்டங்களை 2023 ஏப்ரல் மாதத்தில் நடத்த வேண்டும்.

### துறை சார்ந்த சங்கங்களின் கூட்டங்கள்

இதே ஏப்ரல் மாதத்தில், ஒவ்வொரு துறையிலும் மாநில அளவில் பொருத்தமான இடத்தில் துறை சார்ந்த அனைத்து தொழிற்சங்கங்களின் கூட்டங்களை நடத்த வேண்டும். துறை சார்ந்த கோரிக்கைகளையும் அவற்றை எட்ட விடாமல் தடுக்கிற மோடி அரசின் கொள்கைகளையும் தொழிலாளர்களுக்கு விளக்குவதோடு, துறை சார்ந்த கோரிக்கைகளை முன்வைத்து மாநாடு நடத்தவும், இயக்கங்கள் நடத்தவும் திட்டமிட வேண்டும்.

இந்த கூட்டங்களையும், பின்னர் மாநாடுகளையும் நடத்துவதற்கு துறைவாரியாக பின்வரும் சங்கங்களுக்கு பொறுப்பு அளிக்கப்படுகிறது

போக்குவரத்து கழகங்கள் LPF,CITU, மின்சாரம் CITU, HMS, மத்திய பொதுத்துறை LPF, HMS, மாநில பொதுத்துறை கூட்டுறவு CITU, INTUC, பஞ்சாலை, விசைத்தறி AITUC, HMS, டாஸ்மாக் LPF, AITUC, உள்ளாட்சிப் பணியாளர் AITUC, CITU, உடல் உழைப்பு, கட்டுமானம் - INTUC, AITUC, நுகர்வோர் வாணிபக் கழகம் LPF, AITUC, ஆட்டோ LPF, HMS, பொறியியல் தொழிற்சாலைகள் CITU, INTUC, சென்னைத் தொழிற்சங்கங்கள் WPTUC,MLF, நடுத்தர வர்க்க சங்கங்கள் AIBEA, AIIEA

### மே 6 திருச்சியில் மாநில மாநாடு

மாவட்டங்களில் இருந்து வரும் கருத்துக்களை சீராய்வு செய்து பரப்புரை மற்றும் ‘பெருந்திரள் அமர்வு’ குறித்து திட்டமிட 06.05.2023 காலை 10 மணிக்கு, திருச்சி ரயில் நிலையம் அருகில் உள்ள, எச்எம்எஸ் அலுவலகத்தில் மாநில மாநாடு நடைபெறும். ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும், ஒரு சங்கத்துக்கு மூன்று பிரதிநிதிகள் வீதம் மாநாட்டில் பங்கேற்க வேண்டும்.

### மே, ஜூன் மாவட்ட மாநாடுகள்

மாநில மாநாட்டு முடிவுகளை விளக்கி கூறி, பரப்புரை இயக்கம், பெருந்திரள் அமர்வுப் போராட்டங்களுக்கு தொழிலாளர்களை ஆயத்தப்படுத்துவதற்காக, மாவட்ட அளவிலான அனைத்து தொழிற்சங்க மாநாடுகள் மே, ஜூன் மாதங்களில் நடத்தப்பட வேண்டும்.

### துறை சார்ந்த மாநாடுகள்

இதே மே, ஜூன் மாதங்களில், அந்தந்த துறை சார்ந்த சங்கங்கள் சேர்ந்து, மாநிலத்தில் ஏதேனும் இடத்தில் மாநாடுகளை நடத்த வேண்டும்.

### ஜூலை: பரப்புரைப் பயணம்

மாவட்ட மாநாடுகளில் திட்டமிட்டு நடை பயணங்கள், ஜீப்/சைக்கிள்/மற்றும் மோட்டார் வாகனப் பேரணிகள் மூலம் மக்களையும் அனைத்து பகுதி தொழிலாளர்களையும் எட்டும் வகையில் பரப்புரை பயணங்கள் நடத்த வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும், 15 நாட்களுக்கும் அதிகமாக பரப்புரை நடத்த வேண்டும். அதற்கான தேதிகள் மற்றும் வடிவங்களை மாவட்ட கூட்டுக்குழு முடிவு செய்யலாம். அந்தந்த மாவட்டங்களில் உள்ள துறை சார்ந்த சங்கங்களும் இந்த பரப்புரையில் சேர்ந்து பங்கேற்க வேண்டும்.

### ஆகஸ்ட் 9 பெருந்திரள் அமர்வு

பரப்புரை இயக்கம் நிறைவடைந்த பின்பு, ‘வெள்ளையனே வெளியேறு’ நாளான ஆகஸ்ட் 9ம் தேதி மாநில அளவிலான “திரள் அமர்வு” (மஹாபடாவ்) மாநிலத் தலைநகரான சென்னையில் நடத்தப்படும்.

துறை சார்ந்த கோரிக்கைகளுக்கான போராட்டங்களைத் துவக்கி, அவற்றை வேலை நிறுத்தம் வரை கொண்டு செல்ல வேண்டும். அதற்கு அந்தத் துறைக்கு வெளியில் உள்ள மற்ற தொழிற்சங்கங்களும் ஒருங்கிணைந்து ஆதரவு நல்க வேண்டும்.

மாநில அளவிலான “பெருந்திரள் அமர்வு” போராட்டத்திற்குப் பிறகு, அதன் அனுபவங்களை ஆய்வு செய்து, கிளர்ச்சியை மேலும் கூர்மையாக்கி இந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் ஒரு நாடு தழுவிய பொது வேலைநிறுத்தத்தை நோக்கிச் செல்ல வேண்டும்.

தோழர்களே, மேற்சொன்ன இயக்கங்கள் உணர்வுபூர்வமான வகையில் நடத்தப்படுவதற்கும், மோடி அரசின் மக்கள் விரோத, தொழிலாளர் விரோத, தேச விரோதக் கொள்கைகள் விரிவாக எடுத்துச் செல்லப்படுவதற்கும் தகுந்த வகையில் தங்களுடைய மாவட்ட/துறைசார் கூட்டங்களை நடத்தி, மாநில மாநாட்டில் பங்கேற்று, பரப்புரைகளை நன்கு திட்டமிட்டு செய்வதோடு, பல்லாயிரக்கணக்கில் ஆகஸ்ட் 9ஆம் தேதி சென்னையில் தொழிலாளர்கள் வந்து பங்கேற்க அனைத்து ஆயத்த நடவடிக்கைகளிலும் ஈடுபடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம் என மு.சண்முகம், க.அ.ராஜா ஸ்ரீதர், ம.ராதாகிருஷ்ணன், ஜி.சுகுமாரன், டி.வி.சேவியர், வி.சிவகுமார், ஆர்.சம்பத், த.சங்கரபாண்டியன், இரா.அந்திரிதாஸ், ஏ.எஸ்.குமார் ஆகியோர் விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

---

## திருமண விழாவில் ஜனசக்தி வளர்ச்சி நிதி

இந்திய கலாச்சார நட்புறவு கழக சென்னை மாவட்ட பொருளாளரும், தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மத்திய சென்னை மாவட்ட செயலாளருமான ஆர்.எஸ்.மாதவன் அவர்களின் புதல்வியின் இணையேற்பு விழா (எம்.ரேஷ்மி – ஆர்.அரவிந்த்ராஜ்) மார்ச் 12ல் நடைபெற்றது.

இந்திய கலாச்சார நட்புறவு கழக ஒன்றுபட்ட சென்னை மாவட்ட செயலாளரும், அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டுக் கழக மாநில துணை செயலாளருமான பா.செந்தில்குமார் வரவேற்புரை நிகழ்த்தினார். இந்திய கலாச்சார நட்புறவு கழக மாநில துணை தலைவர் மூத்த வழக்கறிஞர் க.தேசிங் தலைமை தாங்க, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் திருமணத்தை நடத்தி வைத்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணை செயலாளர் நா.பெரியசாமி வாழ்த்துரை வழங்கினார்.

மணமக்கள் சார்பாக ஜனசக்தி வளர்ச்சி நிதி ரூ.2000 வழங்கினர். வாழ்க மணமக்கள்.

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 25.03.2023 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57







1ம் பக்க தொடர்ச்சி

## கன்னியாகுமரி

கன்னியாகுமரியில் இருந்து துவங்கிய பயணத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் நா.பெரியசாமி தொடங்கி வைத்தார். துவக்க நிகழ்ச்சிக்கு இளைஞர் பெருமன்ற மாநில துணைச் செயலாளர் இரா.தமிழ்பெருமாள் தலைமை தாங்கினார். கட்சியின் மாவட்டச் செயலாளர் சுபாஷ் சந்திரபோஸ் வாழ்த்துரை வழங்கினார். இதில், இளைஞர் பெருமன்ற மாநில பொருளாளர் மு.சிவாஜி காந்தி, மாணவர் பெருமன்ற மாநிலச் செயலாளர் பா.தினேஷ், நிர்வாகிகள் டி.இசக்கிதுரை, கே.முத்துகிருஷ்ணன், எஸ்.கணேசமூர்த்தி, கே.கிருஷ்பாக்கியம், எஸ்.பழனிமுருகன், இரா.வினோத்குமார், பி.சுரேஷ், எஸ்.சஜீஸ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## வேதாரண்யம்

வேதாரண்யத்தில் இருந்து புறப்படும் பயணத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் கோ.பழனிச்சாமி தொடங்கி வைத்தார். துவக்க நிகழ்ச்சிக்கு இளைஞர் பெருமன்ற மாநிலத் துணைத் தலைவர் கு.ராஜேந்திரன் தலைமை தாங்கினார். நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராசு, மாநில செயற்குழு உறுப்பினர் வை.சிவபுண்ணியம், நாகை மாவட்டச் செயலாளர் சிவகுருபாண்டியன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

இதில், இளைஞர் பெருமன்ற மாநில துணைச் செயலாளர் துரை.அருள்ராஜன், நிர்வாகக்குழு உறுப்பினர் சு.பாலசுப்ரமணியன், தேசியக் குழு உறுப்பினர் பவிதாரணி, நிர்வாகிகள் மாரி.கார்த்திகேசன், ஜி.சரவணன், நாகை சந்திரமோகன், எம்.பிரபாகரன், க.காரல்மார்க்ஸ், எஸ்.இலங்கேஷ், ச.சுதந்திரபாரதி, மாணவர் பெருமன்ற நிர்வாகிகள் க.இப்ராஹிம், ஜெ.பி.வீரபாண்டியன், உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.














Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.